
# மாலை தீப்பொறி

MALAE THEEPORI






2024 செப் 01-15 தொகுதி 23 இதழ் 03 விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200


தோழர். அப்பு





தோழர். சுப்பு



தோழர். பாலன்

## செப்டம்பர் தியாகிகளுக்கு செவ்வணக்கம்









# சமத்துவம் எதிர் ஆர்எஸ்எஸ்: நவீன இந்தியா பற்றிய கருத்துகளுக்கு இடையிலான அடிப்படை போர்

'சாதிய முறை இந்தியாவை ஒருங்கிணைக்கும் காரணியாகும். எவரொருவர் இந்த சாதிய முறையின் மீது தாக்குதல் தொடுக்கிறாரோ அவர் இந்தியாவிற்கு எதிரியாவார்' : என பஞ்சஜன்யா, ஆர்எஸ்எஸ்-இன் இந்தி வார ஏடு தனது தலையங்கத்தில் கூறியது. சாதி முறையை வெளிப்படையாக இப்படி புகழ்ந்திருப்பது அண்மைய ஆண்டுகளில் ஒருபோதும் நிகழவில்லை. அதுவும் இந்திய சுதந்திரத்தின் 77 வது ஆண்டு நினைவுநாளை ஒட்டி இந்தத் தலையங்கம் வெளிவந்துள்ளது. மேலும் அடுத்த ஆண்டில் தனது 100 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடப் போகும் ஆர்எஸ்எஸ், தற்போது இந்தியாவின் அதிகாரப்பூர்வ கருத்தியலுக்கு பொறுப்பாளராக உள்ளது. எனவே இதனை ஒரு வழிவிலகிய வலதுசாரி பிற்போக்கு உளறல் என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

இந்தியா பற்றிய ஆர்எஸ்எஸ்-சின் பார்வையும், இந்திய விடுதலை இயக்கத்தின் மூலம் வளர்ந்து வந்த, பாபாசாகேப் அம்பேத்கரின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டம் உயர்த்திப்பிடித்த, நவீன இந்தியாவின் பார்வையும் ஒன்றுக்கொன்று எப்போதும் நெரெதிராகவே இருந்து வந்துள்ளன. ஆனால் அரசு அதிகாரத்தின் மீது அதிகரித்து வரும் ஆர்எஸ்எஸ் பிடியின் மூலம் பெறப்பட்ட ஆணவத்தாலும் தண்டனையின்மையாலும் மட்டுமே இந்த அளவுக்கு இதனை பகிரங்கமாக கூற முடிந்துள்ளது. ஆர்எஸ்எஸ் அமைப்பில் சேர்வதற்கும் அதன் நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கும் அரசாங்க ஊழியர்களுக்கு இருந்த தடையை ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கை சில நாட்களுக்கு முன்பு நீக்கியதை நாம் கண்டோம்.

தொடக்க ஆண்டுகளில் ஆர்எஸ்எஸ் கருத்தியலாளர்கள் அவர்களுடைய பார்வையை ஒருபோதும் மறைக்க முற்பட்டதில்லை. இந்தியாவின் இலட்சிய சமூக சட்டமாக மனுஸ்மிரிதியை அவர்கள் ஏற்றுக்கொண்டது குறித்தும், முசோலினி, ஹிட்லரின் கருத்துகளையும் கொள்கைகளையும் பின்பற்றுவது குறித்தும் அவர்களது கருத்துகள் மிகவும் வெளிப்படையாகவே இருந்தன. ஆனால் அதனுடைய சட்ட ரீதியான அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவே சுதந்திர இந்தியாவில் அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடைய கதையாடலை அது வேறு வழியின்றி கைக்கொண்டது. அதற்குப் பிறகு அதிகாரத்தை வெல்வதற்கும், தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கும் போட்டிமிகுந்த தேர்தல் அரசியலின் தேவைகளுக்கு ஏற்ப மேலும் கூடுதலாக அது தன்னை தகவமைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. எஸ்சி, எஸ்டி, ஓபிசி-களுக்கு நட்பானவர்கள் என்ற ஏமாற்றுகிற பிம்பத்துடன் வித்தை காட்டுகிற கலையில் இன்றைக்கு ஆர்எஸ்எஸ்-இன் பார்ப்பனிய கரு நன்கு தேர்ச்சி பெற்றுள்ளது.

இந்த செயல்முறையில் சாதிய இட ஒதுக்கீட்டுப் பிரச்சனையை எதிர்கொள்ள பல்முனைப்பட்ட தந்திரங்களைக் கைக்கொள்வதில் ஆர்எஸ்எஸ் நன்கு பரிணமித்துள்ளது. முப்பதாண்டுகளுக்கு முன்பு மண்டல் கமிஷனின் சில பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான தனது முடிவை விபிசிங் அரசாங்கம் முதலில் அறிவித்தபோது, இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உரத்த குரலில் தனது நிலைப்பாட்டை சங்கிப் படையணி வெளிப்படுத்தியதை நாம் அறிவோம். ஆனால் ஆண்டுகள் பல கடந்த பிறகு இட ஒதுக்கீட்டை எதிர்ப்பதில் உள்ள பயனற்ற தன்மையின் எதார்த்தத்தை சங்கிப் படையணி புரிந்து கொண்டது. மாறாக ஓபிசி-யின் ஒரு பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரை நிறுத்துகிற, பிரித்தாளும் சமூக பொறியியலின் கருவியாக, சாதியை பயன்படுத்துகிற வித்தையில் அது தேர்ச்சி பெறத் தொடங்கிவிட்டது. 2000 ஆண்டுகளாக கீழ்நிலையில் உள்ள சாதிகள், சாதிய பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதை முடிவுக்கு கொண்டு வர இன்னும் 200 ஆண்டுகளுக்கு இட ஒதுக்கீடு தேவை என்பதை உயர்சாதி இந்தியர்கள் ஏற்றுக்கொள்வதில் அவர்களை இணங்கவைக்க 2024 தேர்தல்களுக்கு முன்னதாக மோகன் பகவத் முயற்சித்தார்.

பகவத் வாயிலிருந்து வந்த இந்த 2000 ஆண்டுகள் சாதிய ஒடுக்குமுறை என்ற பேச்சு பல பத்தாண்டுகள் மறுப்புக்குப் பிறகு மிகவும் காலதாமதமாக வந்த ஒப்புக்கொள்தல் போலக் கேட்கிறது. தற்போது ஆட்சியில் இருக்கும் போது இட ஒதுக்கீட்டை முற்றிலும் ஒழித்துக் கட்ட வேண்டும் எனச் சொல்வதற்கு மாறாக, இந்த முறையைச் சுற்றி தனது வித்தைகளைக் காட்டுவதன் மூலம் இட ஒதுக்கீட்டை வெட்டிச் சுருக்கவும் மறுக்கவும் பாஜக-விற்கு சிறந்த பல வழிகள் நிச்சயமாக உள்ளன. ஈடபிள்யுஎஸ் ஒதுக்கீடு என்ற பெயரில் உயர் சாதியினருக்கு தனித்த இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியது முதல் பொய்யான, சந்தேகத்திற்குரிய 'என்எப்எஸ்'-இன் (பொருத்தமானவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை) கட்டற்ற பயன்பாடு மூலமாக எஸ்சி, எஸ்டி, ஓபிசி ஒதுக்கீடுகளை நிரப்பாமல் விடுவது, இட ஒதுக்கீட்டை முற்றிலும் தவிர்ப்பதற்குரிய சாக்குப்போக்காக 'குறுக்குவழி நுழைவை' பயன்படுத்துவது, தனியார்மயமாக்கத்திற்கு கண்மூடித்தனமான முன்னுரிமை கொடுப்பது வரை இட ஒதுக்கீட்டு முறையை ஒழித்துக்கட்ட மோடி அரசாங்கம் பல்வேறு வழிகளை கையாள்கிறது.



தொடர்ச்சி 22ஆம் பக்கம்...

மாலை தீப்பொறி

இருவார இதழ்

*2024 செப் 01-15*

*தொகுதி 23 இதழ் 03*

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

## தலையங்கம்

# மதச் சார்பற்ற அரசா? மட அதிபதிகள் அரசா?

*தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் 20 மாதங்கள் உள்ளன. இந்துத்துவ மதவெறி பாசிச பாஜகவை தமிழ்நாட்டில் காலூன்ற விடாமல் செய்ய வேண்டும் என்பது இந்தியா கூட்டணியில் உள்ள எல்லா கட்சிகளின் நிலைப்பாடும் ஆகும். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணியில் முதன்மையான கட்சி திராவிட முன்னேற்ற கழகம். அதுதான் தமிழ்நாட்டில் ஆட்சி அதிகாரத்திலும் இருக்கிறது. இந்த ஆட்சி பெரியார், அண்ணா வழி வந்த "திராவிட மாடல்" ஆட்சி என்று சொல்லிக் கொள்கிறார்கள். பள்ளி, கல்லூரி மாணவர்களிடத்தில் பெரியாரையும் அண்ணாவையும் கொண்டு சேர்க்க பெரிய முயற்சி எதுவும் இதுவரை எடுத்திடாத திமுக அரசு, முருக பக்தி இலக்கியங்களை மையப்படுத்தி இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள பள்ளிகளில், கல்லூரிகளில் மாணவர்கள் மத்தியில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும், விழாக் காலங்களில் முருகன் கோயில்களில் மாணவ, மாணவியர்களைக் கொண்டு கந்தசஷ்டி பாராயணம் செய்விப்பது, முருகப் பெருமானின் பெருமைகள் மற்றும் இலக்கியங்கள் குறித்து இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள கல்லூரிகளில் சிறப்பு ஆன்மீகப் பாடப் பிரிவுகள் கொண்டுவரப்படும் என்று பழனியில் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக கடந்த ஆகஸ்ட் 24, 25 தேதிகளில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்தி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. ஒரு மதச் சார்பற்ற அரசு, இதுபோன்று சமயம் அல்லது மதம் சார்ந்த மாநாட்டை நடத்தியது பெரும் தவறு என்பது மட்டுமல்ல, மிகப் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது. ஆர்எஸ்எஸ்-பாஜக சங்கிகள் தங்களை வளர்த்துக் கொள்ள இந்து சமயக் கடவுள்களையும் கோயில்களையும் ஆன்மீகப் பரப்புரைகளையும் கையிலெடுத்துச் செயல்படுகிறார்கள் என்பதற்காக, அதே வழியை திமுக அரசும் கையிலெடுப்பது சங்கிகளின் வளர்ச்சியைத் தடுப்பதற்குப் பதிலாக வளர்க்கவே செய்யும். இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக சனாதன இந்து தர்மத்தைக் கொண்டு வருவதுதான் ஆர்எஸ்எஸ்-பாஜகவின் ஒரே குறிக்கோள். அதனால்தான் அவர்கள் அரசமைப்புச் சட்ட முகவுரையிலிருந்து மதச்சார்பின்மை என்பதை நீக்க வேண்டும் என்றார்கள். அவர்களைக் கண்டித்த, சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசிய திமுக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் தலைக்கு விலை பேசினார்கள் சங்கிகள். அப்போது அச்சங்கிகளுக்கு எதிராக கடும் கண்டனத்தையும் உதயநிதிக்கு ஆதரவையும் தெரிவித்த இடதுசாரி கட்சிகளும் முற்போக்கு, ஜனநாயக இயக்கங்களும் இப்போது திமுக அரசே நடத்தியுள்ள முருகன் மாநாட்டையும் முருகன் பெயரால் கல்வியைக் காவிமயமாக்கும் தீர்மானங்களையும் கண்டித்துள்ள போதும், அதுபற்றி கொஞ்சம்கூட கண்டுகொள்ளாமல் அத்தீர்மானங்களை அமல்படுத்திட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்*

தொடர்ச்சி 6ஆம் பக்கம்...

# முதலிடம் பிடித்த தமிழ்நாடு;

# முதலீட்டிற்கான அமெரிக்க பயணம்!



“தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம்”, ஜூலை 21 நாளேடுகளை இந்த முழுப்பக்க முகப்பு விளம்பரம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை வெளியிட்டிருந்த அந்த விளம்பரம், ஒன்றிய அரசின், நிதி ஆயோக் அறிக்கையை மாநில விளம்பரமாக வெளியிட்டிருந்தது.

வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, குறைந்த செலவில் மாசிலா எரிசக்தி, இந்த மூன்று குறியீடுகளில் முதலிடத்தையும் மேலும் 10 துறைகளில் முன்னணி நிலை வகிப்பதாகவும் அந்த விளம்பரம் கூறுகிறது.

பாஜக கூட்டணிக்கு எதிராக இந்தியா கூட்டணியில் இடம் பெற்று, தீவிர தேர்தல் பரப்புரை செய்து 40க்கு 40 (தமிழ்நாடு, புதுச்சேரி) பெற்ற திமுக, தேர்தல் முடிந்தவுடன் மோடியின் கைப்பொம்மையான நிதி ஆயோக் கருத்துகளை, தனது ஆட்சிக்கு கிடைத்த ஆகப்பெரிய, பாராட்டாக எடுத்துக்கொண்டு அரசு செலவில் இந்த விளம்பரத்தை வெளியிட்டுள்ளது.

மோடி ஆட்சிக்கு வந்தபிறகு, கொண்டு வரப்பட்ட நிதி ஆயோக் அமைப்பு, இந்தியாவை மாற்றியமைப்பதற்கான தேசியநிறுவனம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அது, மோடியின் விருப்பங்களுக்கு ஏற்ப இந்தியாவை சித்தரிக்கும் ஒரு “சிந்தனை” அமைப்பு. அதன் தரவுகளும் ஆய்வு அணுகுமுறைகளும் கேள்விக்குரியவை. உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் போன்ற அமைப்புகளின் சிந்தனையை எதிரொலிப்பவை.

நிதி ஆயோக் அறிக்கையை திமுக அமைச்சர்களும் கட்சித்தலைவர்களும்கொண்டாடிக்கொண்டிருக்க, பாஜக அண்ணாமலை அதே அறிக்கையை சுட்டிக் காட்டி “தமிழ்நாடு பின்தங்கிவிட்டது” என்று அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார். ஒரே அறிக்கை. எதிரும் புதிருமான கருத்துகள்! அரசியலில் இதெல்லாம் சகஜம்!

### நிதி ஆயோக் அறிக்கை; நிதி நிலை அறிக்கை

ஜூலை 23 அன்று மோடி 3.0 ஆட்சியின் முதலாவது நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டு மக்கள் மீதான வஞ்சத்தைக் காட்டியது. தமிழ்நாட்டுக்கென எவ்வித திட்டங்களும் இல்லாமல், கோரிக்கைகள் எதுவும் கண்டுகொள்ளப்படாமல் தமிழ்நாடு முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டிருந்தது. நிதி ஆயோக் அறிக்கை தமிழ்நாட்டை

பாராட்டிக்கொண்டிருக்க, மோடி ஆட்சியின் நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டு மக்களை தண்டித்துக் கொண்டிருந்தது. தமிழ்நாடு மக்கள் பாஜக கூட்டணியை தோற்கடித்ததுதான் காரணம். தமிழ்நாட்டு மக்களின் குரலாக, ஜூலை 27 அன்று மோடி தலைமையில் நடக்கும் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணிப்பதென்று முடிவு செய்தார். தவறு மேல் தவறு செய்யும் பாஜக இன்னும் மோசமான தோல்வியை சந்திக்கும் என்று விளாசினார். நிதி ஆயோக் அறிக்கையை தலையில் வைத்துக் கொண்டாடிய மு.க.ஸ்டாலின், நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணிக்கும் முடிவுக்கு தள்ளப்பட்டது அவரே எதிர்பார்த்திராத திருப்பம்!

**திருப்பம் தந்த தேனீர் விருந்து!**

ஆளுநர் ஆர்.என்.ரவி அளித்த சுதந்திர நாள் தேனீர் விருந்தில் முதலமைச்சர் தனது அமைச்சர் சகாக்களுடன் கலந்து கொண்டார். ஆட்சிக்கு பெரும் முட்டுக்கட்டைகளை போட்டு வந்த ஆளுநர் நடவடிக்கைகளைக் கண்டித்து கடந்த ஆண்டுகளில் தேனீர் விருந்தை புறக்கணித்து வந்த முதலமைச்சர் இந்த ஆண்டு கலந்து கொண்டது அனைவரது புருவங்களையும் உயரச்செய்தது. அமைச்சர்கள் சிலர், அண்ணாமலையுடன் கைகுலுக்கி பேசிக் கொண்டிருந்தனர். கூட்டணிக் கட்சிகள் எல்லாம் தேனீர் விருந்தை புறக்கணிக்க கூட்டணிக்குத் தலைமை தாங்கிய ஆளும் கட்சி கலந்து கொண்டது, அடுத்த தேர்தல் உடனடியாக இல்லாதபோது, கட்சி வேறு; ஆட்சி வேறு என்று காட்டும் முயற்சியாகவும் எடுத்துக் கொள்ளலாம். நிதிநிலை அறிக்கை கசப்பைத் தணித்துக் கொள்ள, ராஜ்பவன் தேனீர் விருந்து உதவியிருக்கலாம்!

**கலைஞர் நாணயம்**

கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டை ஒட்டி ஓராண்டு முழுவதும் நடந்த கொண்டாட்டங்களின் உச்சகட்டமாக கலைஞர் நினைவு நாணயம் வெளியீட்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. யாரும் எதிர்பாராதவகையில், மோடியின் ஒப்புதலோடு ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் விழாவில் கலந்து கொண்டு நாணயத்தை வெளியிட்டுள்ளார். அதுமட்டுமல்ல கலைஞர் நினைவிடத்தை சுற்றிப்பார்த்துவிட்டு கருணாநிதி பற்றி புகழ்ந்தும் பேசியிருக்கிறார். முதலமைச்சர் ஸ்டாலின் சொற்களில் கூறுவதாயின், “திமுககாரர்கள் கூட இந்த அளவு கருணாநிதியை புகழ்ந்து பேசியிருக்கமாட்டார்கள்”. திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், முதல்முறையாக, ஒன்றிய மோடி ஆட்சிக்கு ஒரே சமயத்தில் பாராட்டையும் கண்டனத்தையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. அதிமுகவோ ஒன்றிய ஆட்சிக்கு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியது; திமுக-பாஜகவுக்கிடையே ரகசிய உறவு உள்ளதாகவும் குற்றம் சாட்டியது. கலைஞர் நாணய வெளியீட்டு நிகழ்வுக்கு ஏன் காங்கிரஸ் தலைவர்களை அழைக்கவில்லை என்றும் கேள்வி எழுப்பியது.

**அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு**

ஆகஸ்டு 24, 25 நாட்களில் பழனியில், கோலாகலமாக நடந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை முதலமைச்சர் துவக்கிவைத்து பேசியுள்ளார். அறிஞர்கள், ஆதினங்கள், நீதிபதிகள் கலந்துகொண்ட அந்த மாநாட்டில், “எல்லார்க்கும் எல்லாமும்” என்பதுதான் திராவிட மாடல் அரசின் கொள்கை\தத்துவம் என்று முழங்கினார். முருகன் கையிலெடுத்த முருகனை முத்தமிழ் முருகனாக்கி திமுக அரசு கையிலெடுத்துள்ளது. மாநாட்டில் 21 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதல் தீர்மானம் மிகப்பெரிய வேல் நடுவதை கோருகிறது. பாஜக வுக்கு செங்கோல்; திமுகவுக்கு வேல்! இந்த மாநாட்டுத் தீர்மானங்கள் முருகன் மீது சொந்தம் கொண்டாடும் ’ஆன்மீக அரசியல்’. திமுக இந்துக்களுக்கு எதிரானது, கடவுள் நம்பிக்கை யற்றவர்கள் கோவில்களிலிருந்து வெளியேறவேண்டும் என்ற இந்துத்வா முழக்கங்களுக்கு அதே மொழியில் பதில் கூறும் அரசியல். மதச்சார்பின்மை பேசும் கட்சி நடத்தும் ஆட்சி, மதச்சார்பின்மையை பின்பற்ற வேண்டும்; மதம் சார்ந்த விழாக்களை நடத்தக்கூடாது. முத்தமிழ் முருகன் மாநாட்டு தீர்மானங்கள் கூட்டணி கட்சிகளின் விமர்சனத்தைப் சம்பாதித்துள்ளன.

**திமுகவின் உட்கட்சி அரசியல்**

திமுக அமைச்சர், வேலு நடத்திய புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரஜினியின் பேச்சு திமுகவிற்குள் புகைச்சலை கிளப்பிவிட்டிருக்கிறது. திமுகவில், “பழைய மாணவர்கள், புதிய மாணவர்கள்” என்ற அவரது ஒப்பீடு விவாதப் பொருளாகியிருக்கிறது. திமுகவின் “5ம் தலைமுறை தலைவர் உதயநிதி ஸ்டாலின்”, புதியவர்களுக்கு பழையவர்கள் வழிவிட வேண்டுமென்று பேசியிருக்கிறார். ஆனால், ரஜினியின் பேச்சில் உள்ள வேறொரு குறிப்பை எவரும் கவனத்தில் கொள்ளவில்லை. கருணாநிதி நாணயம் வெளியீட்டு விழாவில் ராஜ்நாத்சிங் பேசிய பேச்சை ஸ்டாலின் போலவே பாராட்டிப் பேசிய ரஜினிகாந்த், “மேலிடத்தில் உள்ளவர்கள் சொல்லாமல் அவர் அப்படி பேசியிருக்கமாட்டார்” என்று

ஒரு திருகலை வழங்கியுள்ளார். கலைஞரைப் பற்றி பாராட்டிப்பேசி, பாஜக-திமுக உறவு பற்றிய ஊகங்களுக்கு ராஜ்நாத் தீனிபோட்டு சென்றுள்ளார் என்றால் அந்த ஊக அரசியலை ஊதிப் பெரிதாக்க முயல்கிறார் ரஜினிகாந்த். ரஜினி கட்சி தொடங்காமலிருக்கலாம் ஆனால் அவ்வப்போது பாஜகவுக்கு ஆதரவாக அரசியல் செய்கிறார்.

**ட்ரில்லியன் பொருளாதாரம்; அமெரிக்கப் பயணம்**

ஆகஸ்ட் 17, அன்று இந்தியாவிலேயே மிகப்பெரிய பெண்தொழிலாளர் தங்கும் விடுதியை முதலமைச்சர் திறந்து வைத்திருக்கிறார். ரூ 706 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்த மிக நவீன விடுதிகளில் பாக்ஸ்கான் பெண்தொழிலாளர் 14000க்கும் மேற்பட்டவர்கள் தங்குவார்கள் என்று சொல்லப்படுகிறது. பாக்ஸ்கான் நிறுவனத்தில், 2022 ல் உணவு நஞ்சாகிப்போய், பல்லாயிரக் கணக்கான பெண் தொழிலாளர் போர்க்குணமிக்க வேலைநிறுத்தத்தில் குதித்தனர். ஆலை ஸ்தம்பித்துப்போனது. அதற்குப் பிறகே இந்த தங்கும் விடுதி அரசால் கட்டப்பட்டுள்ளது. இது போன்ற விடுதிகளைக் கட்ட வேண்டிய பொறுப்பு பெரும் தொழில் நிறுவனங்களுடையது. அந்த பொறுப்பை, அரசு ஏற்றுக் கொள்கிறது, நிறுவனங்கள் லாபம் பார்க்கின்றன! விழாவில் பேசிய, முதலமைச்சர், பாக்ஸ்கான் நிறுவனத்தில் வேலைசெய்யும் 41 ஆயிரம் தொழிலாளருள் 35 ஆயிரம் பேர் பெண் தொழிலாளர் என்பதைக் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளருள் 42% பெண் தொழிலாளர் என்றும் இந்தியாவிலேயே இதுதான் அதிகம் என்றும் பெருமையுடன் பேசினார். “பெண் என்னும் பேராற்றல்” பற்றி பாராட்டிப் பேசியுள்ளார். முதலமைச்சரது கனவான ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தை அடைய பாக்ஸ்கான் போன்ற நிறுவனங்கள் உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். ‘பெண் எனும் பேராற்றலும்’ (மிக மிக மலிவான உழைப்பும்) அரசின் சலுகைகளும்தான் பாக்ஸ்கானில் லாபத்தை மலை மலையாய் குவிக்கிறது. இப்படித்தான் தமிழ்நாட்டின் ஒரு ட்ரில்லியன் பொருளாதாரம் எனும் கனவு நிறைவேற்றப்பட வேண்டுமென முதலமைச்சர் விரும்புகிறார். இந்தக் கனவுத் திட்டத்துடன்தான் அமெரிக்க முதலீடுகளை ஈர்க்க ஆகஸ்ட் 27 அன்று அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ளார். இதுதான் “எல்லார்க்கும் எல்லாம்”! இதுதான் “திராவிட மாடல்” அரசியல்!

-பாசு

என்றும் அடுத்து அம்மன் மாநாடு நடத்தப்படும் என்றும் முதலமைச்சரால் பாராட்டப்பட்ட “செயல் பாபு” அறிவித்துள்ளார் என்றால், திமுக அரசு எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது? புதிய தேசிய கல்விக் கொள்கை கல்வியைக் காவிமயமாக்குகிறது என்று பரப்புரைப் பயணம் திமுக தலைவர்களால் நடத்தப்பட்டது. இப்போது பள்ளி, கல்லூரிகளில் முருகப் பெருமான் பற்றிய பாடத்திட்டம் வைக்கப்படும் என்கிறது திமுக அரசு. தமிழ்நாட்டில் உள்ள சைவ சமய ஆதினங்கள் முதல் அர்சுன் சம்பத் வரை முருகன் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அடுத்து வைணவத் தலங்களுக்கு யாத்திரை செல்ல மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லாப் பயண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலில் பெரியாரைப் போற்றிய சீமான் தற்போது “முப்பாட்டன் முருகன்” என்றுதான் சொல்கிறார். திமுக அமைச்சரோ முருகப் பெருமான் என்றே சொல்ல ஆரம்பித்துவிட்டார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய கல்விக்கான நிதியை, புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தினால்தான் தருவோம் என்கிறது என “சமயம்” பார்த்துச் சொல்கிறார்.

இது தமிழ்நாட்டில் சனாதன சங்கிகளை பின்னுக்குத் தள்ள திமுக எடுத்துள்ள தவறான ஆயுதம், வழிமுறை. இன்னும் எத்தனையோ கோயில்களில் பட்டியலின மக்கள் நுழைய முடியவில்லை.தேர் இழுக்க முடியவில்லை. சப்பரம் தூக்க முடியவில்லை. ஏன், தமிழ்நாடு அரசு நியமித்த தலித், பிற்படுத்தப்பட்ட அர்ச்சகர்கள் இன்னும் கோயில் கருவறைக்குள் நுழைய முடியவில்லை. இதையெல்லாம் சரிசெய்வதற்குப் பதிலாக சங்கிகளின் சனாதனத்தை கையில் எடுத்து இந்துக்கள் வாக்கைப் பெற்று விடலாம் என திமுக நினைத்தால் திமுக விற்கே அது ஆபத்தாக முடியலாம். மாற்று அரசியலை, மாற்றுக் கலாச்சாரத்தை முன்வைப்பதே வெற்றி தரும். மதம், சமயம், கடவுள், விழா எல்லாம் மக்களின் விருப்பத்தேர்வாக மட்டுமே இருக்க வேண்டும். மதம், மதநம்பிக்கைகள், வழிபாடு இவற்றிலிருந்து அரசு விலகியே இருக்க வேண்டும். அதுதான் மதச்சார்பற்ற அரசு. பெரியாரின் பகுத்தறிவு வழிவந்தவர்கள் எனச் சொல்லிக் கொண்டு, நடைமுறையில் அதற்கு நேர்மாறாகச் செயல்படுவது என்பது தமிழ்நாட்டில் இந்துத்துவ பாஜகவுக்கு எதிராக திமுகவை ஆட்சியில் அமரவைத்த தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

# அடுத்து வரும் தேர்தல்வரை

## இந்தியா கூட்டணி தாக்குப்பிடிக்கும் என்று நினைக்கிறீர்களா...?

**(சிபிஐ எம்எல் கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர் சிறப்புப் பேட்டி பிடிஐ யின் 4 'நாடாளுமன்றத் தெரு' சேனலில் வெளிவந்தது)**

(ஆங்கிலத்தில் பேட்டி: https://youtu.be/lLnosZxjpXw)

**தமிழாக்கம்: சி. மதிவாணன்**

**பகுதி -3 சென்ற இதழ் தொடர்ச்சி...**

பேட்டியாளர்:

**இடதுசாரி கட்சிகள் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவதை இன்று காண்கிறோம். மாணவர் சங்கங்களும் கூட ஒன்று சேர்ந்து நிற்கின்றன. அப்படியிருக்கும்போது இடது கட்சிகள் தனித்தனி அடையாளங்களை வைத்துக்கொள்வது எதற்காக? வரும் காலத்தில் இடது கட்சிகள் ஒரே கட்சியாக இணைந்து விடும் என்று எதிர்பார்க்கலாமா?**

திபங்கர்:

அதற்கான வாய்ப்பில்லை என்று சொல்ல மாட்டேன். உடனடி வாய்ப்பு இருப்பதாக நான் நினைக்கவில்லை. 1964 வரை இந்தியாவில் ஒரே ஒரு கம்யூனிஸ்ட் கட்சிதான் இருந்தது. அது வரலாறு. வேறுபாடுகள் எழுந்தன. அந்த வேறுபாடுகளின் காரணமாக வெவ்வேறு கட்சிகள் ஏற்பட்டன. எதிர்காலத்தில் ஒன்றிணைவது நடக்கலாம். வலுவான இடது அமைப்பு வருங்கால இந்தியாவிற்குத் தேவையானதாக இருக்கிறது. வெவ்வேறு இடது அரசியல் கட்சிகள் இருப்பதால் வெகுமக்கள் அமைப்புகளின் எண்ணிக்கையும் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகிவிட்டன. கட்சிகளுக்கு இடையில் இருக்கும் வேறுபாடுகள் காரணமாக வர்க்க-வெகுமக்கள் அமைப்புகளின் எண்ணிக்கை அதிகமானது. அடிப்படையில் அரசியல், கருத்தியல் வேறுபாடுகளால்தான் இவ்வாறு ஆனது. அவை மிகப்பெரிய வேறுபாடுகளாக இல்லாமல் இருக்கலாம், இருந்தாலும் வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றைப் பேசித் தீர்க்கும் வரை முழுமையான ஒன்றுபடுதல் அல்லது இணைவதை எதிர்பார்க்க முடியாது.

**சிபிஐ மாவோயிஸ்ட் போன்ற கட்சிகளைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்? அவர்களைப் பிரதான அரசியல் நீரோட்டத்திற்கு அழைத்து வந்து தேர்தலில் பங்கெடுக்கச் செய்யவும், வன்முறையை கைவிட செய்யவும் ஏதேனும் முயற்சிகள் இருக்கின்றனவா?**

அவர்கள், அவர்களுக்கே உரிய வழிமுறைகளின்படி தாங்கள் பிரதான நீரோட்டத்தைச் சேர்ந்த கட்சி என்று கருதுகிறார்கள். எது பிரதான நீரோட்டம், எது பிரதான நீரோட்டம் இல்லை என்று நாம் வரையறை செய்ய முடியாது. யதார்த்தத்தில் மக்களும் கட்சிகளும் தங்கள் சொந்த அனுபவங்களின் மூலமே கற்றுக்கொள்கிறார்கள். எனவே, அவர்கள் தங்களின் சொந்த அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்வார்கள். அவர்கள் தங்களின் சொந்த வேலைத்திட்டத்தை, போராட்டத்தை முன்னெடுப்பதற்கான பிற வழிகளை முயற்சித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது என்று நான் உணர்கிறேன். நாம் அதற்காகக் காத்திருக்க வேண்டும் (வேறுவழியில்லை).



உதாரணமாக நேபாளத்தைச் சொல்லலாம். அங்கே ஒரு மாவோயிஸ்ட் கட்சி இருந்தது. பற்பல ஆண்டுகளாக அவர்கள், நாடாளுமன்ற அரசியலில் பங்கெடுக்காமல் இருந்தார்கள். ஆனால், நேபாளத்தில் நிலைமைகள் மாறியதற்கு ஏற்ப அவர்களின் அனுபவத்திற்கேற்ப அவர்கள் வேறு ஒன்றைச் செய்ய ஆரம்பித்தார்கள். எனவே, இங்கேயும் கூட நாம் அவர்களுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்களின் அனுபவங்களை அவர்கள் மதிப்பீடு செய்வதற்காக நாம் காத்திருக்க வேண்டும்.

**ஆனால், நீங்கள் அவர்களுக்கு அறிவுரை சொல்ல மாட்டீர்கள்?**

இல்லை. அது நமது வேலை இல்லை. ஆலோசனை வழங்கப்படுவதை எந்த ஒருவரும் வெறுப்பார். எனவே, யாரும் கேட்காதிருக்கும்போது அறிவுரை கூறுவது நமது வேலையில்லை.

**இந்தியா கூட்டணி பெரும்பான்மை பெறாததற்கான காரணம் என்ன? அடுத்த தேர்தல் வரை இந்த கூட்டணி நீடிக்குமா? அடுத்த ஆண்டு வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் வரை, தாக்குப் பிடிக்குமா?**

உங்களுக்கு ஏன் பெரும்பான்மை கிடைக்கவில்லை

என்று நீங்கள் கேட்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த ஆட்களுக்கு 100 இடம் கிடைப்பதே போதுமானது என்று சிலர் நினைத்திருந்திருப்பார்கள் (சிரிக்கிறார்). கவனியுங்கள் 30 அல்லது 40 இடங்களில் வாக்கு வித்தியாசம் மிக அற்பம் என்ற அளவுக்கு குறைவாக இருந்தது. 32 அல்லது 35 இடங்களில் வாக்கு வித்தியாசம் 40,000க்கும் குறைவாக இருந்தது. அல்லது இதில் தப்பாட்டம் ஏதும் இல்லை என்று நான் ஒட்டுமொத்தமாகச் சொல்ல முடியாது. இதில் அநியாயம் எதுவும் நடக்கவில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

நான் இப்படி சொல்லிவிட்டபோதும் கூட, சில மாநிலங்களில் இந்தியா கூட்டணி இன்னமும் சிறப்பாகச் செயல்பட்டிருக்க முடியும். அவற்றுள் ஒன்று பீகார். நாங்கள் உத்தரப்பிரதேசத்தில் செயல்பட்டது போல பீகாரில் செயல்பட்டிருந்தால் விஷயம் மாறிப்போயிருக்கும். காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் கர்நாடகத்தையும்கூட குறிப்பிடலாம். அங்கேயும் நாங்கள் இன்னும் கொஞ்சம் சிறப்பாக வாக்குகள் வாங்கியிருக்கலாம். நாங்கள் தோல்வியடைந்த முக்கியமானவற்றுள் மத்தியப்பிரதேசம், சத்தீஷ்கர், ராஜஸ்தானில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல். இந்தத் தேர்தல்களிலும் இந்தியா கூட்டணியாகப் போட்டியிட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை. விளைவாக நாம் விரும்பிய திசையில் தேர்தல் முடிவுகள் வரவில்லை. இந்த ஆண்டின் துவக்கத்தில் நல்ல வேகத்துடன் நாங்கள் புறப்பட்டோம். ஆனால், வேகத்தைத் தக்க வைக்க முடியவில்லை. வேகத்தை இழந்தது மிகவும் முக்கியமான ஒன்று. அதனை சரிசெய்து கொள்ளவும் முடியவில்லை. இடங்களைப் பங்கிட்டுக்கொள்வதில் நாங்கள் நிறைய நேரத்தைச் செலவு செய்துவிட்டோம் என்று நினைக்கிறேன். அதனால், போராட்டங்களைக் கட்டமைக்கும் பாதையில் முன்னேறிச் சென்று மக்களிடம் செய்திகளை கொண்டு சேர்க்க முடியவில்லை.

மக்கள் உண்மையில் என்ன எதிர்பார்த்திருந்தார்கள்? உதாரணமாக, வெற்றி பெற்ற இடங்களை ஆராய்ந்து பார்த்தால், நான் அதனை இந்தியா கூட்டணியின் அரசியல் பலத்துடன் சம்பந்தப்படுத்திப் பார்க்க மாட்டேன். அது அப்படி இருக்கவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால் இந்தியா (கூட்டணி) மட்டும் களத்தில் நிற்கவில்லை. அதனுடன் பலரும் சேர்ந்து களத்தில் நின்றனர். தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் போராட்டங்களைப் பாருங்கள். விவசாயிகளின் இயக்கம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மாணவர்களின் போராட்டம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சிவில் உரிமை போராட்டங்கள் நடைபெற்றன. இந்த அனைத்துப் போராட்டங்களின் பலமும் இந்தியா கூட்டணியின் பலத்துக்கு வலு சேர்த்தன. டிஜிட்டல் ஊடகங்களையும் சொல்ல வேண்டும். நான் அவர்களை சுதந்திரத்திற்கான டிஜிட்டல் போராளிகள் என்று குறிப்பிட்டு வருகிறேன். இவை அனைத்தும் சேர்ந்துதான் இந்த வெற்றி சாத்தியமானது. தேர்தல் ஒரு மக்கள் இயக்கமாக மாறியது. ஆனால், இந்தியா கூட்டணி உறுப்பினர்களுக்கு இடையில் இன்னமும் கொஞ்சம் அடிப்படை வேறுபாடுகள் இருந்தன. ஒருவேளை இன்னமும் கூடுதலான இயற்கையான ஒத்திசைந்த கூட்டு நடவடிக்கைகள் இருந்திருக்கும் என்றால், புரிதல் இருந்திருக்கும் என்றால், அனேகமாக தேர்தல் முடிவுகள் இன்னமும் சிறப்பானதாக இருந்திருக்கும். இருந்தாலும் இதுவரை வென்றிருப்பது கூட நல்லதுதான்.

அதாவது, பாஜக கடுமையான அடி வாங்கியிருக்கிறது. அது நல்லது. அது மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. அது ஏதோ ஓரஞ்சாரமானது அல்ல. அந்தக் கட்சியின் மிக முக்கியமான இரண்டு அம்சங்களின் மீது அடி விழுந்து, பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. ஒரு அம்சம் இந்துத்துவா ஆகும்; மற்றொரு அம்சம் மோடி வழிபாடு என்ற வணிக முத்திரையாகும். இந்த இரண்டு அம்சங்களும் நடந்து முடிந்த தேர்தலில் மிகக் கடுமையாக அடி வாங்கியுள்ளன. நாம் இதனை அடிப்படையாகக் கொண்டு துவங்க வேண்டும். இந்தியா கூட்டணி என்பது காலத்தின் தேவையினால் உருவானது. எனவே, இந்தியா கூட்டணியிடமிருந்து இன்னமும் கூடுதலாக தற்போதைய சூழல் எதிர்நோக்குகிறது. இன்னமும் கூடுதலான அய்க்கியத்தை எதிர்பார்க்கிறது. இந்தியா கூட்டணி மேலும் உறுதிப்படுவதை எதிர் பார்க்கிறது. இந்தியா கூட்டணி மேலும் சிதைவதை எதிர் நோக்கவில்லை. எனவே, நாம் சூழலுக்கு ஏற்ப பணியாற்றுகிறோம் என்றால், இந்தியா கூட்டணி ஒன்றுபட்டு நிற்காதிருப்பதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை.

ஆனால், மாநில அரசியல் மாறுபட்டது. உதாரணமாக கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கத்தைச் சொல்லலாம். அங்கெல்லாம் தேர்தலுக்கு முந்தைய கூட்டணி ஏற்படவில்லை. டெல்லியில் கூட்டணி அமைப்பது மிக மிக சிரமங்கள் நிறைந்த ஒன்றாக இருந்து வருகிறது. எப்படி இந்த வேறுபாடுகளைக் கடந்து வரப்போகிறோம்? அல்லது, இந்த வேறுபாடுகளுக்கு இடையில் எப்படி பயணப்படப் போகிறோம்? எப்படி எங்களின் ஒற்றுமையைத் தக்கவைத்துக்கொள்ளப் போகிறோம்? என்பது எங்களுக்கு முன்புள்ள மிகப் பெரிய சவாலாகும்.

# சுற்றுச்சூழல், காலநிலை நெருக்கடி (பகுதி 4)

கட்சி ஆவணங்கள்

*(2023 பிப்ரவரி 16-20ல் பாட்னாவில் நடைபெற்ற 11வது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)*

17. வன, சுற்றுச்சூழலுக்கான சட்ட முன்முயற்சி அமைப்பு, மேற்கொண்ட ஒரு பகுப்பாய்வு, 2019 ஜனவரி முதல் ஜூன் வரை வனவிலங்கு (கானுயிர்கள்) சரணாலயங்கள், பூங்காக்களை மேற்பார்வையிடுவதற்கான முக்கியகுழு, 70 இல் 63 வளர்ச்சித் திட்ட முன்மொழிவுகளை அங்கீகரித்ததன் விளைவாக 216 ஹெக்டேர் (540 ஏக்கர்) பரப்பளவு நிலத்திற்கு பாதுகாப்பை குறைத்து விட்டதை எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவில், 2016 க்கும் 2019 க்கும் இடையே கிட்டத்தட்ட 76 லட்சம் மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. வட மாநிலமான உத்தரகண்டில், இந்து யாத்திரைத் தலங்களுக்கு நெடுஞ்சாலைகள் அமைக்க, சுற்றுச்சூழல் ரீதியில் எளிதில் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய பகுதியில், கிட்டத்தட்ட 25000 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. கடந்த 6 ஆண்டுகளில் இந்தியாவின் சுற்றுச்சூழல் அமைச்சகம் பெற்ற 2592 முன்மொழிவுகளில் 2256 (87%) திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளதை அரசாங்கத்தின் தரவுகளே தெரிவிக்கின்றன. ஜூலை 2014 முதல், எளிதில் பாதிக்கக்கூடிய உயிர்ப்பன்மை பகுதிகள், தேசிய பூங்காக்கள் உள்ளிட்ட, இந்தியாவின் மிகவும் பாதுகாக்கப்பட்ட சுற்றுச்சூழல் மண்டலங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் 270 க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. தேகிங்-பட்கை வனவிலங்கு சரணாலயத்தில், அப்பகுதிக்கு மட்டுமே உரிய (திணை சார்ந்த) எண்ணற்ற, உயிரினங்களுக்கு வீடாகவும், 'கிழக்கு அமேசான்' எனவும் அறியப்படும், இப்பகுதியில் 98.59 ஹெக்டேரில் (246.475 ஏக்கர்) திறந்தவெளி சுரங்கங்கள் தோண்ட வடகிழக்கு நிலக்கரி வயல்கள் நிறுவனத்திற்கு, தேகிங்-பட்கை வனவிலங்கு தேசிய வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இது, வன விலங்குகளுக்கான (கானுயிர்கள்) இருப்பிடத்தைச் சுருக்கி மனித-விலங்கு மோதல்களை அதிகரிக்கச் செய்யும். மகாராஷ்டிரா அரசாங்கம், எளிதில் சூழல் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய உப்பளங்களை, நன்செய் நிலங்கள் என்று வகைமாற்றம் செய்துள்ளதால் இந்தப்பகுதி தவிர்க்க முடியாதவாறு கட்டுமான, குடியிருப்புத் திட்டங்களுக்கான கதவைத் திறந்துவிடும். அந்தமான் நிக்கோபார் தீவுப் பகுதியின் மிக ஆபத்தான நில அதிர்வு மண்டலத்தில், பெட்டக முனையம், விமான நிலையம், நகரியம், மின் உற்பத்தி நிலையம் ஆகியவை சம்பந்தப்பட்ட ஆகப்பெரும் 'வளர்ச்சி'த் திட்டத்தை முன்னெடுப்பதற்கான முன்மொழிவு சமீபத்தில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது, பண்டைய மழைக்காடுகள், உள்ளூர் பூர்வபழங்குடி குழுக்கள், கானுயிர்களுக்கு மீளமுடியாத மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும்.

18. விவசாய துறையில் பெருங்குழுமக் கட்டுப்பாட்டிற்கு ஆதரவாக, சுற்றுச்சூழலுக்கு சீரழிவு ஏற்படுத்தும் விவசாயக் கொள்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. பசியை எதிர்த்துப் போராடுவோம் எனும் பெயரில் சுற்றுச்சூழலுக்கு பேரழிவு ஏற்படுத்தும் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள், இந்திய அரசாங்கம்-பெருங்குழுமக் கள்ளக்கூட்டால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று, விவசாயத்தில் காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களுக்கு தீர்வாக உலக வங்கி, உணவு விவசாயக் கழகம், வளர்ந்த நாடுகள் ஆகியவற்றின் வழியாக “பருவநிலைக்கேற்ற பொலிவுறு விவசாயம்” என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. இது தொழில்நுட்பம், விதைகள், நிதி, உரங்கள், மற்ற இடுபொருட்கள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கும். இருப்பினும், விவசாயிகளும் மக்களும் இந்த (விதை போன்ற) தீர்வுகளை உரிமைகொள்ள முடியாது. இதனை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் தொழில்துறையும் அவற்றை தங்களிடமே வைத்துக் கொள்ளும். பசுமைப் புரட்சியின் உதாரணம் நம்முன்னே உள்ளது. அந்தத் திட்டம் நம் நாட்டை தற்சார்புடையதாக மாற்றி இருந்தாலும், விவசாயிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பெருந்துயரத்தை கொண்டு வந்தது. நிலமுள்ள விவசாயிகளுக்கு பசுமைப் புரட்சி பலன் கொடுத்தது. அதன்மூலம் ஏற்றத்தாழ்வை அதிகரித்தது. பூச்சிக் கொல்லிகளையும் உரங்களையும் பயன்படுத்தியதன் விளைவாக பெருமளவுக்கு மண் மாசுபட காரணமாகி பஞ்சாப், ஹரியானா, வேறுபல மாநிலங்களிலும் பாதகமான பக்க விளைவுகளை ஏற்படுத்தியது. நிலத்தடிநீர் மிகமிகக் குறைந்ததோடு, மண் சீரழிவு, உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் பெருமளவு சார்ந்திருப்பது என பசுமைப் புரட்சியின் பின்விளைவுகள் பஞ்சாபில் இன்னும் உணரப்படுகிறது. இந்த மாதிரியைத்தான் பருவநிலைக்கேற்ற பொலிவுறு விவசாயம், காலநிலை மாற்றத்தை தடுத்துப்போராட நகலெடுக்க விரும்புகிறது என்றால், அது விவசாயத்துறைக்கு மட்டுமல்ல, நாட்டிற்கும், ஒட்டுமொத்த பூமி முழுவதற்குமே பிரம்மாண்டமான பேரிடராக அமையும். விவசாயத் துறையில் முதலில் நெருக்கடியை உருவாக்கிய உர, பூச்சிக்கொல்லி, விதை, வேளாண் தொழில்துறையினர்தான், காலநிலைக்கேற்ற பொலிவுறு விவசாயத்தை உந்தித் தள்ளுபவர்கள். தற்போது காலநிலை மாற்றத்தை எதிர்த்துப்போராடுவது என்ற பேரால், பல்வேறு நாடுகளில் மக்களாலும் விவசாயிகளாலும் போராடி நிராகரிக்கப்பட்ட


பொருட்களையும், கொள்கைகளையும் அவர்கள் மீண்டும் அறிமுகப்படுத்தி வருகிறார்கள்.

19. கெட்டுவரும் காற்றின் தரம், தண்ணீர் நெருக்கடி, நிலத்தடி நீர் மாசுபடுதல் ஆகியவற்றின் காரணமாக, உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள மக்கள் உயிர் பிழைத்திருப்பதற்கான தீவிர சவால்களை ஏற்படுத்தியுள்ளது; அதிலும், குறிப்பாக, மிகவும் பின்தங்கிய (தாழ்த்தப்பட்ட) மக்கள் பிரிவினருக்கு ஏற்படுத்தியுள்ளது. அறைக்குள் தரமான காற்று (ஐக்யூஏர்) 2021 அறிக்கையின் படி, மத்திய, தெற்கு ஆசியாவிலுள்ள மிகவும் மாசடைந்த 15 நகரங்களுள் 12 மாசடைந்த நகரங்கள் இந்தியாவில் உள்ளன. தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக புதுதில்லி உலகிலேயே மிகவும் மாசடைந்த தலைநகரம் என்ற இடத்தைப் பெற்றுள்ளது. 2019 ஆண்டு நிதி ஆயோக் அறிக்கையின்படி, தன்னுடைய வரலாற்றில் மிக மோசமான தண்ணீர் நெருக்கடியால் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 60 கோடி பேர், தண்ணீர் பற்றாக்குறையில் உள்ளனர். பெங்களூரு, டெல்லி, ஹைதராபாத், சென்னை உள்ளிட்ட 21 நகரங்கள் 2021 லேயே நிலத்தடி நீர் வளத்தை குறிப்பிடுமளவு உறிஞ்சித் தீர்த்துவிட்டன. தூய்மை கங்கை, தூய்மை இந்தியா இயக்கம் போன்ற திட்டங்களில் ஆயிரக்கணக்கான கோடிகள் செலவழிக்கப்பட்டும், கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுகளால் நீர் மாசடைதல், நீரோட்டத்தை தடுக்கும் பல்வேறு தடைகள் ஆகியவற்றோடு ஆறுகள் போராடிக் கொண்டுள்ளன. பெரும் விளம்பரப்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் பாதுகாப்பான தண்ணீர் வழங்குவதையும், தொடர்ச்சியான தண்ணீர் தரக் கட்டுப்பாட்டையும் உறுதி செய்ய இயலவில்லை. காலரா பரவல் மீண்டும் தோன்றியுள்ளது. தண்ணீர், மண், வனம் ஆகியவற்றை முழுமையாக பாதுகாப்பதன் மூலம் நாட்டில் வறட்சியை எதிர்த்துப் போராடுவதில் முக்கியப் பங்காற்றும் ஒருங்கிணைந்த நீர்நிலை மேலாண்மை திட்டத்திற்கு ஒதுக்கப்படும்நிதி கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை, பிரதம மந்திரி விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆக்கப்படுவதன் மூலம், (இத்திட்டம்) படிப்படியாகக் கைவிடப்பட்டு வருகிறது.

**–தொடரும்**

# சைகோன் புதுச்சேரி

## நூல் அறிமுகம்




புலம்பெயர்ந்து பிரான்சில் வசித்து வருபவர் தமிழ் எழுத்தாளர் நாகரத்தினம் கிருஷ்ணா. அவர் நீலக்கடல் (2005), மாத்தா ஹரி (2008), காஃப் காவின் " நாய்க்குட்டி" ( 2015 ), ரணகளம் 2018, கிருஷ்ணப்ப நாயக்கர் கௌமுதி (2012 ), இறந்த காலம் (2019) ஆகிய புதினங்களை புதுச்சேரியை மையமாகக் கொண்டும் இதர பிரெஞ்சு காலனிய நாடுகளின் சமூகத்துடன் தொடர்புபடுத்தியும் கதைகளை, நாவல்களைப் படைத்துள்ளார். அவர் தற்போது எழுதியுள்ள நாவல் 'சைகோன் புதுச்சேரி'. பிரெஞ்சு காலனியாக இருந்த புதுச்சேரியுடன் இந்தோசீனா என்று பரவலாக அழைக்கப்பட்ட வியட்நாம் (சைகோன் ) உறவின் பின்புலத்தில் எழுதப்பட்ட வரலாற்று சமூக புதினம் ஆகும். 1930க்கும் 1960க்கும் இடையே புதுச்சேரியிலும் சைகோனிலும் இக் கதை களம் கொண்டுள்ளது.

பிரெஞ்சு காலனியாதிக்கத்தின் கீழ் புதுச்சேரி இருந்தபோது சமூகத்தில் நிலவிய சாதி, மதம், சாதிய ஒடுக்குமுறை, தீண்டாமை மற்றும் சொத்துரிமை, வாரிசுரிமை, ஆணாதிக்கம் பற்றியும் "ரெனோன்சான்" என்ற தகுதியில் காலனிய பிரெஞ்சு அரசாங்கத்திடம் பிரெஞ்சு குடியுரிமை பெற்று சைகோன் சென்றவர்களின் துரோகங்கள், அதிகார மமதை, அடிமைத்தனம், உழைக்கும் மக்கள் மீதான அவர்களின் கொடுமைகள் பற்றியெல்லாம் பேசுகிறது இந்த நாவல். அதேவேளை, இந்திய தேசிய ராணுவம் அமைத்த சுபாஷ் சந்திர போசுக்கு ஆதரவாக நின்ற லயோன் புருஷாந்தி என்கிற ரெனோன்சான் அவருக்கு துணையாக நின்ற பிரெஞ்சு இந்திய பெண்மணி வேதவல்லி இருவரையும் மையமாகக் கொண்டுள்ளது கதை. புதுச்சேரியில் 8 மணி நேர வேலைக்காகப் போராடியதால் 12 தொழிலாளர்கள் பிரஞ்சு அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வுகள், விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் பற்றி உலகுக்குச் சொன்ன பிரெஞ்சு தன் கீழான காலனி நாடுகளில், குறிப்பாக இந்தியாவிலும் வியட்நாமிலும் நடத்திய வன்முறைகளை, வதைகளை இந் நாவல் காட்சிப்படுத்தியிருக்கிறது.

# கோவில்கள், மடங்கள், அறக்கட்டளைகள், அனைத்து சமய நிறுவனங்களின் சாகுபடி நிலங்களை குத்தகை விவசாயிகளுக்கு சொந்தமாக்கிட வேண்டும்!

அ.சந்திரமோகன்

2016 இல் வெளியான புள்ளியியல் துறையின் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள 71 லட்சம் சிறு, குறு விவசாயக் குடும்பங்களில் சுமார் 30% விவசாயிகள் குத்தகை நிலங்களில் பயிர் சாகுபடி செய்கிறார்கள். இவர்களுள் கணிசமானவர்கள் கோவில்கள், மடங்கள், வக்ப் போர்டுகள், தேவாலயங்கள் மற்றும் அறக்கட்டளைகள் உள்ளிட்ட அனைத்து சமய நிறுவனங்களுக்கும் சொந்தமான இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்பவர்கள்.

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ், 36,615 கோவில்கள்; 56 மடங்கள்; மற்றும் 19 மடங்களுடன் இணைந்த குறிப்பிட்ட கட்டளைகள், மடத்துடன் இணைந்த 57 கோவில்கள்; 1,721 குறிப்பிட்ட அறக்கட்டளைகள்; 189 அறக்கட்டளைகள்; 17 சமண கோவில்கள் உள்ளன. இவற்றுக்கு சொந்தமாக நன்செய், புன்செய், மானாவாரி என, 4.78 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருப்பதாக அறநிலையத்துறை தெரிவிக்கிறது.

கோவில்களுக்கு சொந்தமாக மட்டும், 22,600 கட்டடங்கள்; 33, 665 மனைகள் உள்ளன. விவசாய நிலங்கள் 1.23 லட்சம் பேருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் வாடகை, குத்தகை என கோவில்களுக்கு, 10 ஆண்டுகளில் 1,365 கோடி ரூபாய் கிடைத்தது; ஆண்டுக்கு 135 கோடி ரூபாய் மட்டும் வருமானம் கிடைக்கிறது.

கோயில்களுக்குக் கீழே 4,22,000 ஏக்கர் நிலங்களும், 56 மடங்களுக்குக் கீழே கிட்டத்தட்ட 56,000 ஏக்கர் நிலங்களும் உள்ளன. தஞ்சாவூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் மட்டும் மடங்களுக்குச் சொந்தமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் குவிந்து கிடக்கின்றன. திருவாவடுதுறை ஆதீனத்துக்கு மட்டும் சுமார் 19,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் காசி மடம், தருமைபுரம் ஆதீனம், வானமாமலை ஆதீனம், திருக்குறுங்குடி ஜீயர் மடம், மதுரை ஆதீனம், அகோபில மடம், காஞ்சி சங்கர மடம் போன்ற ஆதீன மடங்கள் தங்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மற்றும் மனைகள் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் ஈட்டுகின்றன. கோவில்கள், மடங்களுக்கு சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள், குடியிருப்பவர்கள் பிரச்சினைகள் ஏராளமானது.

### மடங்களின் நிலப்பிரபுத்துவ ஆதிக்கமும், குத்தகைதாரர்களின் உரிமைகளற்ற நிலையும்

மன்னராட்சி காலத்தில், கோவில்களும், மடங்களும் ஏராளமான நிலங்களை தானங்களாக / நிலமானியங்களாகப் பெற்றன. இத்தகைய நிலங்கள் அல்லாமல் பிற இனாம் நிலங்கள், பஞ்சமி, அரசுப் புறம்போக்கு நிலங்கள், நீர்நிலைகளையும் கூட மடங்கள் ஆக்கிரமித்து கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. மடாதிபதிகள் அரசியல் கட்சிகள், அரசு நிர்வாகம், நீதித்துறை அனைத்தின் மீதும் செல்வாக்கு கொண்டுள்ளனர்.

கடந்த 1973 ம் ஆண்டில், திருப்பனந்தாள் ஊராட்சி தலைவர், கள்ளபட்டம் கிராமத்தைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவர், திருப்பனந்தாள் ஒன்றியத்தில் உள்ள பட்டம், மாராச்சேரி, கோழிகுத்தி கிராமங்களின் 1000 ஏக்கர் இனாம் நிலங்களை திருப்பனந்தாள் காசி மடம் ஆக்கிரமித்துள்ளதாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். பத்தாண்டுகள் கழித்து, 1983 ல், தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், "அந்த நிலங்கள் திருப்பனந்தாள் காசி மடத்திற்கு சொந்தம்" எனத் தெரிவித்து வழக்கை முடித்து வைத்தது.

சில தலைமுறைகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட குத்தகை ஒப்பந்த பத்திரம் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் ஒருவரிடமும் தற்போது இல்லை. ஒருசிலரிடம் குத்தகை பதிவு உரிமை ( RTR ஆவணங்கள்) முப்பாட்டன், பாட்டன் பெயரில் இருக்கலாம். தற்சமயம், நெல் குத்தகை அளந்து கொடுத்ததற்காக மடங்கள் தரும் ரசீது மட்டுமே குத்தகை விவசாயிகளுக்கு ஆதாரமாக இருக்கிறது.



*தொடரும் காவிரி நதிநீர் பங்கீடுப் பிரச்சினையால், தஞ்சாவூர் டெல்டா விவசாயிகள், சாகுபடி காலகட்டத்தில் கடும் தண்ணீர் பற்றாக்குறையால் தவிக்கின்றனர். மின்சார மோட்டார்கள் மூலமாக நிலத்தடி நீர் எடுத்து சாகுபடி செய்ய விரும்பும் குத்தகைதாரர்கள், மின் மோட்டார் இணைப்புக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் செய்தால், சம்பந்தப்பட்ட மடங்கள் தடையில்லாச் சான்று / NOC தரவேண்டும் என்கிறது. இதற்காக மடங்களை அணுகினால், குத்தகை பாக்கிகள் என்ற பெயரால், இலட்சக்கணக்கான ரூபாய்களை மடங்கள் வாங்கிக் கொள்கின்றன; அவற்றையும் செலுத்தி விவசாயிகள் தடையில்லாச் சான்று / NOC வாங்கினாலும், மின் இணைப்பு மடங்கள் /கோவில்கள் பெயரில் தான் இருக்கும் ! குத்தகை பதிவு உரிமை / RTR மாற்றம் செய்யவும் கூட இலட்சங்களில் பணம் செலுத்த வேண்டும். அதேபோல, மடங்கள், கோவில் நிலங்களில் வீடு கட்டி வாழ்பவர்களுக்கு தமிழ்நாடு அரசு பட்டா ஆவணங்கள் எதுவும் வழங்குவதில்லை. வீட்டு மனைகள் பெயர் மாற்றம் செய்வதற்கும் கூட இலட்சங்களில் பணம் செலுத்த வேண்டும்.*

*பல்வேறு பொது காரியங்களுக்கு கோவில் மட நிலங்கள் கையகப்படுத்தப்படும் போது, குத்தகை விவசாயிகள் அனாதைகள் ஆக்கப்படுகின்றனர். காலங்காலமாக நிலவும், "உழவடை பாத்தியம்" 4 ல் 1 பங்கு கூட அவர்களுக்கு வழங்கப்படுவது இல்லை. உதாரணமாக, கடந்த 2020 ம் ஆண்டில், நெடுஞ்சாலை திட்டத்திற்காக, திருப்பனந்தாள் ஒன்றியத்தில் உக்கரை, தத்துவாஞ்சேரி, பட்டம், கோழிகுத்தி, திருவாய்ப்பாடி, ஆனைக்கோவில் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் குத்தகை விவசாயிகள் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன ; குத்தகை விவசாயிகளுக்கு இழப்பீடுகள் எதுவும் தரப்படவில்லை. திருப்பனந்தாள் காசிமடம் 80 கோடி ரூபாய் இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டது!*

*இயற்கை சீற்றக் காலங்களில் அரசு வழங்கும் கடன் தள்ளுபடி உள்ளிட்ட நிவாரண உதவிகளையும், நலத்திட்டப் பயன்களையும், பயிர்க் காப்பீட்டு திட்ட பலன்களையும் குத்தகை விவசாயிகள் பெற முடியாத அவலநிலை தொடர்கிறது; விவசாய இடுபொருள்கள், கருவிகள், மானியம் பெற இயலவில்லை. வங்கிகளில் கடன் பெற இயலவில்லை.*

*பிரதமரின் விவசாயிகள் நிதியுதவி திட்டத்திலும் பயன் இல்லை. கடந்த 2019 ல் தொடங்கப்பட்ட பிரதமரின் விவசாயிகள் நிதி உதவித் திட்டம் (பி.எம் கிசான் சம்மான் நிதி)*

*படி, 4 மாதங்களுக்கு ஒருமுறை 2000- ரூபாய் என ஆண்டிற்கு 6000 ரூபாய் விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்தியா முழுவதும் 10.09 கோடி விவசாயிகள் பயன் பெறுவதாக சொல்லப்படுகிறது. ஆனால், நாடு முழுவதும் சுமார் 26 லட்சம் ஏக்கர் சமய நிறுவன நிலங்களை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் உட்பட சுமார் 2.5 கோடி விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்; இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுவதில்லை!*

**குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச் சட்டங்கள்**

*மன்னராட்சி கால நிலப்பிரபுத்துவ அமைப்பின் மிச்சசொச்சமாக கோவில்கள், மடங்கள் இன்னபிற சமய நிறுவனங்கள் இலட்சக்கணக்கான ஏக்கர் விவசாய விளை நிலங்கள், நகர்ப்புற மனைகள் மற்றும் அசையா சொத்துகள் வழியாக சுரண்டல், ஒடுக்குமுறை செலுத்தி வருவது மாபெரும் சமூக அநீதியாகும். தங்களுடைய சமயம் சார்ந்த செயல்பாடுகளுக்காக, சமய நிறுவனங்கள் மிகப்பெரிய பொருளாதார சுரண்டல் நிறுவனங்களாக, இணை அரசாங்கம் போல செயல்படுவது சனநாயக அமைப்பு முறைக்கு முரணானதாகும்.*

*தமிழ்நாட்டில் குத்தகை விவசாயிகள் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் பெயரளவிலானதாகவே இருக்கிறது. தமிழ்நாடு சாகுபடி குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் - 1955 ல் உருவாக்கப்பட்டது; 1965 ல் இந்தச் சட்டம் நிரந்தர சட்டமாக்கப்பட்டு, குத்தகை விவசாயிகள் தொடர்பான பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கான அடிப்படைச் சட்டமாக கருதப்படுகிறது.*

*தமிழ்நாடு சாகுபடி குத்தகைதாரர்கள் (வெளியேற்றத்தில் இருந்து பாதுகாப்பு) சட்டம் 1983 ஜூலை 1 ல் உருவாக்கப்பட்டது.*

*நீதிமன்ற வழக்கில் ஒரு பிரதிவாதி குத்தகை விவசாயி ஆக இருந்தால், அவர் சட்டத்தின் பலன்களைப் பெற தகுதியுடையவராக இருந்தால், நீதிமன்றம் வழக்கை வருவாய் கோட்ட அதிகாரிக்கு மாற்ற வேண்டும். இச் சட்டத்தின் கீழ், ஒரு விண்ணப்பம் போல அந்த அதிகாரி வழக்கை கையாளுவார்; மேலும், குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் அல்லது பொது அறக்கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் III இன் கீழ் குத்தகை விவசாயிகள் விண்ணப்பம் செய்தால், நில உரிமையாளர்கள் சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களை அவர்களது நிலங்களில் / சொத்துகளில் இருந்து வெளியேற்ற முடியாது. இச்சட்டத்தில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டு தமிழ்நாடு சாகுபடி குத்தகைதாரர்களை வெளியேற்றத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் -1997 உருவாக்கப்பட்டது.*

*சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் தொடர்பாக அவ்வப்போது உருவாக்கப்பட்ட புதிய சட்டங்கள், திருத்தங்கள் அனைத்தும் குத்தகை பாக்கிகளை வசூலிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாக இருக்கின்றன ; குத்தகை விவசாயிகளுக்கு உரிமைகள் அளிப்பதாக சட்டங்கள் இல்லை. குத்தகை தொகை / வாடகை பன்மடங்கு உயர்த்தப்படுவது தொடர்கதையாக*

உள்ளது.

**நில உச்சவரம்பு சட்டங்களால் பயன் இல்லை**

இதுகாறும், ஒன்றிய, மாநில அரசுகள் நிறைவேற்றிய பல்வேறு நில உச்சவரம்பு சட்டங்களால், சமய நிறுவனங்களின் நிலங்களில் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் எவ்விதப் பலன்களையும் அடையவில்லை. சொந்தமாக நிலங்களைப் பெறுவதற்கு வழியில்லாதவர்களாக, பல தலைமுறைகளாக சுரண்டப்பட்டு வருகின்றனர்.

மடங்கள், கோவில்கள் மற்றும் சமய நிறுவனங்கள், அறக்கட்டளைகள் கட்டுப்பாடுகளில் கட்டுண்டு இருக்கும் குத்தகை விவசாயிகளுக்கு சாகுபடி செய்யும் நிலங்கள் மீதான சுதந்திர உரிமைகள் இல்லாததால், அவர்களால் ஊக்கமாக விவசாய சாகுபடியிலும் ஈடுபட இயலவில்லை; உற்பத்தி திறனையும் உயர்த்த முடியவில்லை.

மடங்கள், கோவில்கள் அவற்றின் நிலங்களை மாறாமல் / யாருக்கும் மாற்றாமல் வைத்திருக்க வேண்டும் என்று சட்டங்கள், விதிகள் எதுவும் இல்லை. தங்களுடைய தேவைகளுக்காக, மடங்கள், கோவில்கள் அவற்றின் நிலங்களை விற்பதற்கு, இந்து சமய அறநிலையத் துறை சட்டப்பிரிவு 34 அனுமதியளிக்கிறது. எனவே, கோவில்கள், மடங்கள் நிலப்பிரபுத்துவ பாணியில் விவசாய நிலங்களைத் தங்களிடம் குவித்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. காலம் காலமாக குத்தகை விவசாயிகள் உழைத்துச் சாகுபடி செய்து பண்படுத்திய நிலங்களை அவர்களுக்கே வழங்கி விடலாம்!

**குத்தகை விவசாயிகளுக்கு சாகுபடி நிலங்களை, குடியிருப்பவர்களுக்கு மனைகளை சொந்தமாக்கிடுக**

இந்து சமய அறநிலையத் துறை சட்டப்பிரிவு 34 கோவில்களின் நிலங்களை விற்பதற்கு அனுமதி அளிப்பதால், முந்தைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான தமிழக அரசாங்கம் கடந்த 30.8.2019 ல் அரசாணை 318 யை வெளியிட்டது; நீண்டகாலமாக கோயில் இடத்தில் குடியிருப்பவர்களுக்குத் தகுதி அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தது. இதை செயல்படுத்தக் கூடாது என இந்துத்துவ அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன; சேலம் ராதாகிருஷ்ணன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, இடைக்கால தடை உத்தரவு பெற்றார்.

அரசாணை 318-க்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்யக் கோரியும், இடைக்கால தடை உத்தரவை ரத்து செய்யச் கோரியும், தமிழக அரசும், 10க்கும் மேற்பட்ட பயனாளிகளும் தனித்தனியாக வழக்குத் தொடுத்தனர்; அக். 2020 ல் சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற கோயில் நிலம் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில், வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி, சம்பந்தப்பட்ட அந்த வழக்கிற்கான ஒரு உத்தரவைப் பிறப்பிக்காமல், ஒட்டுமொத்த இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான கோயில் நிலங்கள் குறித்தும், “கோயில் இடங்கள் கோயில் பயன்பாட்டிற்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும்” என்று உத்தரவைப் பிறப்பித்தார். இது இப் பிரச்சினையில் நீதிமன்ற முட்டுக்கட்டையாக மாறியுள்ளது.

- **எனவே, தமிழ்நாடு அரசு உடனடியாக சீராய்வு மனு தாக்கல் செய்து அரசாணை 318 க்கு உள்ள தடையை நீக்கி கோவில் நிலத்தில் உள்ள ஏழைகளுக்கு பட்டா கொடுக்க வழிவகை செய்திட வேண்டும்!**
- **குத்தகை விவசாயிகளுக்கு குத்தகை பதிவு உரிமை RTR வழங்கிட வேண்டும் !**
- **பல்வேறு சட்டச் சிக்கல்கள், நீதிமன்ற முட்டுக்கட்டைகள் நிலவுவதால், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் மூலமாக, தாமதமின்றி உடனடியாக கணக்கெடுத்து, தமிழ்நாடு அரசு குத்தகை விவசாயிகளுக்கு உடனடியாக அடையாள அட்டை வழங்கிட வேண்டும்!**
- **தமிழ்நாடு அரசின் மின் வாரியம் குத்தகை விவசாயிகள் கோரும் மின் இணைப்புகளுக்கு, கோவில், மடங்கள், அறக்கட்டளைகள் இன்னபிற சமய நிறுவனங்களிடம் இருந்து தடையில்லாச் சான்று / NOC வாங்கித்தர வேண்டும் என்ற நிபந்தனை விதிக்காமல் மின்சார மோட்டார் இணைப்பு வழங்க வேண்டும்!**
- **உயர்த்தப்பட்ட குத்தகை தொகைகளை குறைத்திட வேண்டும்! குத்தகை பாக்கிகள் மற்றும் வட்டிகளை தள்ளுபடி செய்திட வேண்டும்!**
- **அனைத்திற்கும் மேலாக, சமய நிறுவன நிலங்களில், பல தலைமுறைகளாக குடியிருப்பவர்கள், சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அவரவர் அடிமனைகளை/ இடங்களை, விவசாயநிலங்களை இழப்பீடு பெறாமல் சொந்தமாக்கிட வேண்டும்!**

குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம், குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டங்களுக்காக உரிமை கொண்டாடி வருகிறது திமுக அரசாங்கம். செத்துப்போன அந்த சட்டங்களுக்கு உயிர் கொடுக்க, கோவில், மடம் உள்ளிட்ட சமய நிறுவனங்களின் நிலங்களை அவற்றை பயிரிடும் விவசாயிகளுக்கு சொந்தமாக்கும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்திட வேண்டும். திராவிட ஆட்சிகளில் நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்ட கதை பேசப்பட்டு வருகிறது. அது உண்மையானால், இந்து சமய அறநிலையத் துறை ஆதரவுடன் கோவில், மடங்கள், சமய நிறுவன நிலப்பிரபுத்துவம் நீடிக்கலாமா? கூடாது.

# வண்டலூர் உயிரியல் பூங்கா ஏஐசிசிடியு தொழிற்சங்கத் தலைவர் தோழர் இரணியப்பன் கைது

அரசுத் துறையில் 10 ஆண்டுகளாகப் பணிபுரியும் தினக்கூலி தொழிலாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று திமுக 2021 தேர்தலின்போது வாக்குறுதி அளித்திருந்தது. ஆண்டுகள் 3 கடந்த பின்னரும் வண்டலூர் உயிரியல் பூங்காவில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்யவில்லை. அந்தக் கோரிக்கைக்காக பல போராட்டங்கள் நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை என்பதால் 20.8.2024 அன்று சட்டமன்ற முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என ஏஐசிசிடியு அறிவித்திருந்தது. 20.8.2024 அன்று அதிகாலை ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவரும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான சொ.இரணியப்பன் வீட்டிற்கு காவல்துறையினர் சென்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரைக் கைது செய்து, கிளாம்பாக்கம் காவல் நிலையத்தில் வைத்திருந்தனர். தமிழ்நாடு முழுவதும் இந்த தொழிலாளர் விரோத, கைது நடவடிக்கையைக் கண்டித்து குரல் எழுந்தவுடன் 20.8.2024 காலை 11.30 மணியளவில் உயிரியல் பூங்கா இயக்குனருடன் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார்கள். பேச்சுவார்த்தையில் சொ.இரணியப்பன், சங்கத் தலைவர் ஜெயசீலன், சங்க நிர்வாகிகள் சரவணன், சரசு, ராமச்சந்திரன், மணிமேகலை, திவாகர், கௌசல்யா ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையில், தொழிலாளர்கள் பணி நிரந்தரம் குறித்து இயக்குனர் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்புவதாக உறுதியளித்தார். தொழிற்சங்க காரணங்களால் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சம்பளம் இரு மடங்காக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவாதம் அளித்தார். அதன் அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. ஏஐசிசிடியுவின் இந்த போராட்டத்திற்கு சிஐடியு, ஏஐடியுசி தொழிற்சங்கத் தலைவர்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்ததோடு, தோழர் இரணியப்பன் கைது செய்யப்பட்டதற்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்தனர். கைதை கண்டித்து சிபிஐஎம்எல் கள்ளக்குறிச்சி மாவட்டக்குழு ஆர்ப்பாட்டம் நடத்தியது.

# இரவும் எங்களுக்கு சொந்தம்!

AIPWA

மேற்குவங்கம், கொல்கத்தா மருந்துவமனையில் பணியில் இருந்த பெண் மருத்துவரை கூட்டு வன்புணர்வுக்குள்ளாக்கி படுகொலை செய்த பாதகச் செயல் நாட்டை உலுக்கிக் கொண்டிருக்க, உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா மும்பை மருத்துவமனைகளிலும் பெண் மருத்துவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கும், படுகொலைக்கும் ஆளாகி வருகின்றனர். தமிழ்நாடு, உத்தரகண்டில் சிறுமிகள் மீது பாலியல் துன்புறுத்தல்கள், கேரளத்தில் பெண் திரைக் கலைஞர்கள் மீது பாலியல் கொடுமைகள் என பெண்களுக்கு எதிராக தொடரும் வன்முறைகளுக்கு நீதி கேட்டு “இரவும் எங்களுக்கு சொந்தம்! மீட்டெடுப்போம்” என்ற முழக்கத்துடன், அனைத்து பணியிடங்களிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பும் கௌரவமும் உறுதி செய்யப்பட வேண்டும்! நீதிபதி வர்மா கமிட்டி பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும், புதுவை அரசு, மாநில பெண்கள் ஆணையத்தை உடனே செயல்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்! உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் சார்பில் 27.08.2024 அன்று புதுச்சேரி வில்லியனூர் துணைமாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எம்.மல்லிகா, எம்.மீனாட்சி தலைமை தாங்கினார்கள். அஇமுபெக புதுச்சேரி மாநிலச் செயலாளர் விஜயா, , ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் முருகன் மற்றும் எஸ்.அருள், குமார், புரட்சிகர இளைஞர் கழக அமைப்பாளர் ராஜராஜன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

# தமிழ் சினிமாவில் கருத்தியல்: தங்கலான், ரகு தாத்தா ஒரு ஒப்புநோக்கு

ஒரு நல்ல திரைப்படம், திரைப்படக் கலையின் வடிவத்துக்கும் (அழகியல்) அதில் சொல்லப்படும் கருத்துகளுக்கும் (கருத்தியல்) சமமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிரம்மாண்டமாக எடுக்கப்படும் பொழுதுபோக்குத் திரைப்படங்கள் மட்டுமே தமிழ் திரையுலகை ஆதிக்கம் செய்து வந்தன. தற்போது இந்தப் போக்கில் மாற்றம் நிகழ்ந்து வருகிறது. வெறுமனே பொழுதுபோக்கிற்கான ஊடகம் என்பதைத் தாண்டி, சமூகத்தின் ஆன்மாவைக் கேள்விக்குள்ளாக்கும் கதையாடல்களைக் கருவாக, கதைக்களமாகக் கொண்ட திரைப்படங்களாக இன்றைக்கு அது பரிணமித்துள்ளது; அதன் பிரம்மாண்டமான கடத்தும் ஆற்றலைக் கொண்டு சமூகத்தின் எண்ணங்கள் மீது செல்வாக்கு செலுத்துகிற ஆற்றல் வாய்ந்த கருவியாக அது மாறியுள்ளது. இப்பின்னணியில் திரைப்படத்தில் இழையோடும் கருத்தியலை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை திரைப்படங்கள் மூலமாக பொதுச் சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதில் மிகவும் கடப்பாடுடன் செயல்படுபவர் இயக்குனர் பா.ரஞ்சித். அண்மையில் வெளிவந்துள்ள அவரது திரைப்படம் தங்கலான். 1850 காலகட்ட சிறு கிராமம் வேப்பூர். கதையின் நாயகன் ஏழை விவசாயி. நயவஞ்சகமாக கிராமத்தினரின் நிலங்களைப் பிடுங்கிக் கொள்ளும் பண்ணையார். தங்கம் தேடி வரும் வெள்ளையர். அதற்கு உதவுவதன் மூலம் இழந்த தங்களது வாழ்வாதாரத்தை மீட்க எண்ணும் கிராமத்தவர்கள். வெள்ளையரின் சூழ்ச்சிக்குப் பலியாகும் ஒடுக்கப்பட்ட மக்கள். அம்மக்கள் தங்களது வாழ்க்கைப் போராட்டத்தில், வர்க்கப் போராட்டத்தில் என்னாவார்கள்? என்பதே திரைக்கதை.

அனைத்தின் அடிப்படையும் உழைப்பே; உழைப்பின்றி இந்த சமூகத்தில் எதுவுமில்லை, என்ற கடும் எதார்த்தத்தை காட்சிகள் மூலம் சிறப்பாக இயக்குனர் வெளிப்படுத்தி இருக்கிறார். அதிகாரமற்ற ஏழை விவசாயிகளின் நிலங்களை பிடுங்கி, அவர்களை பண்ணை அடிமைகளாக்கி சுரண்டிக் கொழுக்கும் நிலப்பிரபு ஒருபுறம். நிலப்பிரபுகளின் சுரண்டல், ஒடுக்குமுறையிலிருந்து தப்பிக்க எண்ணும் பண்ணை அடிமைகளை, தங்களது பொன்னாசைக்கு நயவஞ்சகமாக சூழ்ச்சியில் சிக்க வைத்து சின்னாபின்னமாக்கும் வெள்ளையர்கள் மறுபுறம். இவர்களது கொடுமைகளை எதிர்த்து தங்களது எதிர்கால நல்வாழ்வுக்காகப் போராடும் பண்ணை அடிமைகள்; கூலித் தொழிலாளர்கள். ஒடுக்கப்பட்டவர்களின் அறியாமையை, உழைப்பை நிலப்பிரபுகளும் காலனிய சக்திகளும் எப்படியெல்லாம் சுரண்டுகிறார்கள் என்பதை நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது இத்திரைப்படம். ஒடுக்குபவர்களுக்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட்டத்தை சக்தி வாய்ந்த கதையாடலாக மாற்றியுள்ளது. இத்திரைப்படக் கதையாடலின் அடிநாதமாக வர்க்கப் போராட்டம் உள்ளது. மார்க்சிய அரசியல் என்ற பரந்த பின்புலத்தில் இவையனைத்தும் காட்சியாக்கப்பட்டுள்ளன.

தனக்கு ஆதரவாகவும் எதிராகவும் தங்கலான்



திரைப்படம் பல்வேறு வகையான விமர்சனங்களை எதிர்கொள்கிறது. இப்படத்தில் மேற்குறிப்பிட்ட கதைக்களத்தில் கூடுதலாக வேறு பல பிரச்சினைகளும் பேசப்படுகிறது. இருப்பினும் வர்க்கப் போராட்டமே அடிப்படைக் கதைக்கரு. அது நேரடியான வார்த்தைகளில் சொல்லப்படாவிட்டாலும் கூட பார்வையாளர்களுக்கு அப்படித்தான் போய்ச் சேரும். உழைக்கும் மக்கள் ஒடுக்குமுறையை, சுரண்டலை எதிர்த்துப் போராடுவதில் உள்ள நியாயத்தைப் பொதுச் சமூகம் புரிந்து கொள்ளவேண்டும் என்கிறது திரைப்படம்.

“ஃபேமிலி மேன்” என்ற தொடரின் மூலம் புகழ்பெற்ற சுமன் குமார் இயக்கியுள்ள “ரகு தாத்தா” என்ற திரைப்படம் இதற்கு முற்றிலும் மாறான கருத்தியலைக் கொண்டுள்ளது. *1960* காலகட்ட வள்ளுவன் பேட்டை ஒரு சிற்றூர். கதையின் நாயகி இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராளி. திருமணத்தில் விருப்பமற்ற இளம்பெண். அவரது தாத்தா புற்று நோயாளி. அதனால் திருமணம் செய்து கொள்ளவேண்டிய கட்டாயம். முற்போக்கு வேசம் போடும் நண்பனுடன் திருமணம் நிச்சயமாகிறது. நண்பனின் வேசம் கலைகிறது. திருமணத்தை நிறுத்த பதவி உயர்வுக்கு முயற்சிக்கிறார். அதற்கு இந்திப் படிப்பு அவசியமாகிறது. இந்தி படித்தாரா? திருமணம் நின்றதா? என்பதே திரைக்கதை.

இத்திரைப்படம் பொதுவாக, பல வழிகளில் திராவிடக் கருத்துகளை சவாலுக்கு இழுத்துள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டின் அரசியல், கலாச்சார வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தை பிடித்துள்ள இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் மரபை இது கொச்சைப்படுத்தியுள்ளது. இந்தி படிக்காததால் பணியில் பதவி உயர்வு பெறுவதில் சிக்கல்; பொது வெளியில் பெரியார் கருத்துகளை, முற்போக்கு சிந்தனைகளை வாய் கிழிய பேசுவோர் அனைவரும் வீட்டில், குடும்பத்துக்குள் பெரும் பிற்போக்கு சிந்தனை உள்ளவர்களாக இருப்பது போன்று காட்சிப்படுத்தியுள்ளனர். பொழுதுபோக்கிற்காக, நகைச்சுவைக்காக எடுக்கப்பட்டது போல தோற்றமளிக்கும் இத்திரைப்படம் பார்வையாளர்களுக்கு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் தவறானது என்ற எதிர்மறைத் தகவலையே தருகிறது. திராவிட இயக்கத்தின் போதாமைகளை நிச்சயமாக சரியான விதத்தில் விமர்சிப்பதில் தவறில்லை. மாறாக அதன் அடிப்படையை கொச்சையாக விமர்சிப்பதில் உள்நோக்கம் இருப்பது போல தெரிகிறது.

முக்கியமானசெய்தி இருந்தபோதிலும் “தங்கலான்” கடுமையான ஆய்வுக்கும் விமர்சனத்திற்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, “ரகு தாத்தா” தீவிரமாக விமர்சிக்கப்படுவதில் இருந்து தப்பிவிட்டது. இது திரைப்பட விமர்சகர்களிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகுமுறை இருப்பதையே காட்டுகிறது. நடப்பில் செல்வாக்கு செலுத்துகிற கலாச்சார அல்லது அரசியல் மனஉணர்வுகளுக்கு விமர்சகர்கள் வழங்கும் ஆதரவுக்கேற்ப ஒரு சில கருத்தியல் கதையாடல்கள் புறக்கணிக்கப்படுகின்றன அல்லது போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படாமல் விடப்படுகின்றன. திரைப்படங்களை விமர்சிப்பதில் உள்ள இந்த சார்பு நிலை திரைப்படம், கருத்தியல், சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான சிக்கலான, பெரும்பாலும் சச்சரவு ஏற்படுத்துகிற உறவைக் கோடிட்டு காட்டுகிறது. பொதுவெளியில் விவாதங்களை கட்டமைப்பதில் இந்த ஒவ்வொரு அம்சங்களும் எப்படி ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது.

ஒருபுறம் இன்றைய இளைஞர்கள் மத்தியில் ரகு தாத்தா போன்ற படங்கள் மறைமுகமாக தவறான கருத்துகளை பரப்பும் வேலையைச் செய்கிறது. மறுபுறம் அண்மைய காலங்களில் வெளிவந்த கவுண்டம் பாளையம் போன்ற திரைப்படங்கள் நேரடியாகவே சாதிய, பிற்போக்கு, நிலப்பிரபுத்துவ விழுமியங்களை உயர்த்திப் பிடிக்கின்றன. இத்தகைய திரைப்படங்களின் பின்னுள்ள பிற்போக்கு கருத்தியல் பொது வெளியிலும் சமூக ஊடகங்களிலும் அம்பலப்படுத்தப்பட வேண்டும். தங்கலான் போன்ற திரைப்படங்களுக்கு ஆதரவு பெருக வேண்டும்.

***– ஜோசுவா; செந்தில்***


**மாலெ தீப்பொறி சந்தாதாரர் ஆகிடுவீர்!**

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200

தீப்பொறி சந்தாதாரராக
QR கோடை ஸ்கேன் செய்யவும்

நன்கொடைகள் தாரீர்

# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில்

# சாதிப் பாகுபாடு!

தியாகி இமானுவேல் சேகரன் பற்றிய ஆய்வுக்கு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வரலாற்றுத்துறை அனுமதி மறுத்திருக்கிறது. வரலாற்றுத்துறை மாணவி வைஷ்ணவி, 2022 -2024 ஆம் கல்வி ஆண்டில், தனது ஆய்வுக் கட்டுரைக்காக ’சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற வீரர்கள்’ என்ற தலைப்பின் கீழ் தியாகி இமானுவேல்சேகரன் பற்றி ஆய்வு செய்ய திட்டமிட்டிருந்தார். அதனை உதவிப் பேராசிரியர் பரந்தாமனிடம் அறிவித்தார். சாதித்தலைவரைப் பற்றி எழுத வேண்டாமென பரந்தாமன் கூறிவிட்டார். இமானுவேலை சாதித் தலைவரென்று முத்திரை குத்திய பரந்தாமனின் பேச்சு மாணவிக்கு மிகுந்த அதிர்ச்சி அளித்தது. ஆனாலும் அதே தலைப்பில்தான் “கட்டுரையை எழுதப்போகிறேன்” எனச் சொல்லி விட்டார். நான் வழிகாட்டியாக வந்தால் இத்தலைப்பை அனுமதிக்க மாட்டேன் என்று கூறி அவரது சாதி வன்மத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மாணவி வைஷ்ணவி தனது ஆய்வுக்கான தரவுகளைத் திரட்டி கட்டுரையை உருவாக்கிட உறுதியுடன் தயாராவதை அறிந்த பரந்தாமன் தனது சாதியைச்சேர்ந்த மாணவர் சத்தியமூர்த்தியை வைஷ்ணவிக்கு எதிராக திருப்பினார். அந்த திட்டத்தின்படி, பிப்ரவரி மாதம், அறிவியல் தினத்தன்று, சத்தியமூர்த்தி கடுமையான வார்த்தைகளைக் கூறி வைஷ்ணவியை அடித்தார். அந்நேரத்தில் உதவிப் பேராசிரியர் பரந்தாமன் வகுப்பறைக்குள்தான் இருந்திருக்கிறார். வகுப்பறைக்குள் சென்று பரந்தாமனைச் சந்தித்த மாணவர் சத்தியமூர்த்தி மீண்டும் வைஷ்ணவியை தாக்க முற்பட்டிருக்கிறார். பெண் துணைப் பேராசிரியர்கள் சாந்தி, ராதா மூலம் வைஷ்ணவியை தனிமைப்படுத்தும் முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறார்.

அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாத வைஷ்ணவி பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் பிரச்சனையைக் கொண்டு சென்றார். பிரச்சனைகளை கேட்டறிந்த துணைவேந்தர், ஜி. ரவி, 44 துறைகள் உள்ள பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பது எப்படி சாத்தியம் என்று கேட்டு தனது இயலாமையை தெரிவித்தார். ’சாதி இரத்தத்திலேயே ஊறிக் கிடக்கிறது’ என்ற தனது வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார். அப்படியானால் அந்த ரத்தத்தைச் சுத்தப்படுத்த வேண்டாமா? என மாணவி பகுத்தறிவு கோபத்தோடு கேட்டிருக்கிறார். நான் கண்டிக்கிறேன் என துணைவேந்தர் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில், எஸ்சி\எஸ்டி செல்லின் உள்விசாரணை அதிகாரி வேதராஜ் மாணவி வைஷ்ணவியை விசாரணைக்கு அழைத்துள்ளார். வேதராஜிடம் நடந்த விபரங்களை மாணவி கூறியுள்ளார். அதிகாரி வேதராஜ் இதில் எந்தப் பிரச்சினையுமே இல்லை; பரந்தாமன் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்றால்



சொல்லுங்கள் நடவடிக்கை எடுக்கிறேன் எனக் கூறியிருக்கிறார். மாணவியோ, சாதிப்பாகுபாடு குறித்த தனது புகார் பற்றி மட்டும் விசாரியுங்கள். புகாரளிக்காத பாலியல் துன்புறுத்தல் பற்றி விசாரிப்பது பாதிக்கப்பட்டவர் பெண்ணாக இருப்பதாலா? எனத் துணிச்சலுடன் எதிர்க் கேள்வி எழுப்பியிருக்கிறார். 5 மாத காலமாக பலவித மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்ட வைஷ்ணவி மனம் தளராது ஆய்வறிக்கையின்

இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளார்.

05.07.2024 விசாரணை முடிவு பற்றி பதிவாளர் கையொப்பமிட்ட அறிக்கை மாணவிக்கு கிடைத்தது. அறிக்கை வரலாற்றுத்துறையில் எந்தவொரு சாதிப்பாகுபாடும் இல்லையென்று கூறியது. வைஷ்ணவி ஆய்வுக்கு எடுத்த, தியாகி இமானுவேல்சேகரன் பற்றி மாணவர்களுக்குத் தெரியும் என்பதால் அந்தத் தலைப்பு வேண்டாம் என பரந்தாமன் கூறினாரே தவிர, சாதியரீதியான எண்ணத்தில் சொல்லவில்லை என்று அறிவுக்குப் புறம்பானஅந்தஅறிக்கைகூறியது. வரலாற்றுத்துறை சிறப்பாக செயல்படுவதாக விசாரணையில் மாணவர்கள் கருத்து தெரிவித்து உள்ளதாகவும் அறிக்கை கூறியது. மாணவி தனது ஆய்வுத் தலைப்பு, இறுதி நிலையில் உள்ளது. இதுவே, பல்கலைக்கழகத்தில் எந்தச் சாதிப்பாகுபாடும் இல்லை என்பதைக் காட்டுவதாகவும் அறிக்கை முடிவுக்கு வந்திருந்தது கண்டு, விசாரணை முடிவு உண்மைக்குப் புறம்பானது என தெளிந்த மாணவி மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மனித உரிமை ஆணையர் ஆகியோருக்கு 14.07.2024 அன்று புகார் மனுக்களை அனுப்பி வைத்தார். 24.7.2024 அன்று தேசிய எஸ்சி ஆணையத்திற்கு மீண்டும் மேல் முறையீடு செய்துள்ளார்.

தேவகோட்டை வட்டம், பூதவயல் கிராமத்தைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகள் வைஷ்ணவி குடும்பத்திற்கும் எதிரிகள் தொல்லைகள், அச்சுறுத்தல் அளித்து வருகின்றனர். மாணவியின் தந்தை நடத்திவரும் மீன்குட்டைகளில் விஷம் வைத்து மீன்களை சாகடித்துள்ளனர்.

மாணவிக்கு ஆதரவாக, நீதிக்கான மக்கள் இயக்கம், அகில இந்திய மாணவர் கழகம், கல்வியாளர்கள், சிவில் உரிமை களப்பணியாளர்கள் குரலெழுப்பி வருகின்றனர். வரும் செப்டம்பர் 2 அன்று, காரைக்குடியில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்துள்ளன. 1.12 லட்சம் மாணவர்களுடன் உலக நாடுகளோடு ஒத்துழைப்பு கொண்டுள்ள 39 ஆண்டு வயது கொண்ட அழகப்பா பல்கலைக்கழகம், இயற்கையான சுற்றுச்சூழலும் மாணவர் நட்பு கல்விச் சூழலும் கொண்ட பல்கலைக்கழகம் என அறிவித்துக்கொள்கிறது. வைஷ்ணவி எதிர்கொண்ட துன்புறுத்தல் இந்த இரண்டின் மீதும் கேள்வி எழுப்புகிறது. புகழ்பெற்ற கல்வியாளர்களைக் கண்ட பல்கலைக்கழகம் கல்விச் சுதந்திரம் இல்லாமலிருக்கிறது. பல்கிப்பெருகும் சாதிச்சூழலால் உறைந்து போயிருக்கிறது. இது கல்விக்கும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தல். பல்கலைக்கழகம் சுத்தப்படுத்தப்பட வேண்டும்.

மாணவியின் புகாரின் அடிப்படையில் அரசுக்குத் தெரிவிக்கும் கோரிக்கைகள்

- 1. சாதியப் பாகுபாட்டோடு தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் ஆய்வுக் கட்டுரையை எழுத அனுமதி மறுத்த பேராசிரியர் பரந்தாமன் மீது காவல்துறை எஸ்சி\எஸ்டி வழக்கின் கீழ் பதிவு செய்து கைது செய்ய வேண்டும். பரந்தாமன், மாணவன் சத்தியமூர்த்தி மீது மாணவியை தாக்கிய குற்றத்திற்காக கொலை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 2. விசாரணை என்ற பெயரில் பாதிக்கப்பட்ட மாணவியை நிற்க வைத்தும், அறைக் கதவை அடைத்தும் விசாரணை செய்த வேதராஜ் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 3. துறைத்தலைவர், பாதிக்கப்பட்ட மாணவியின் விசாரணைக்கு விதிப்படி ஒரு பெண் உதவிப் பேராசிரியரை அனுமதிக்காமலும், விசாரணையின் போது அக்கறையுமின்றி இருந்துள்ளார். விதி மீறல் குற்றத்துக்காக துறைத்தலைவர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 4. உதவிப் பேராசிரியர் பரந்தாமனுக்கு ஆதரவாகவும் மாணவி வைஷ்ணவிக்கு எதிராகவும் செயல்பட்டுள்ள பெண் உதவிப் பேராசிரியர்கள் சாந்தி, ராதா இருவர் மீதும் துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 5. அழகப்பா பல்கலைக் கழகத்தினுள்ளே ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு சாதியப் பிரிவுகளாகவே தனித் தனியாக இயங்கி வருவதைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்திட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 6. அரசு அதிகாரிகள், பல்கலைக் கழக ஆசிரியர்கள் சாதியப் பாகுபாட்டோடு நடந்து கொண்டால் துறை சார்ந்த நிர்வாக விசாரணைக்குப் பின் தான் எஸ்சி \எஸ்டி வழக்கு பதிய முடியும் என்ற நடைமுறை மாற்றப்பட்டு நேரடியாக எஸ்சி\எஸ்டி வழக்கைப் பதிவு செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 7. பல்வேறு அரசு நிறுவனங்களிலும் எஸ்சி\எஸ்டி செல் என்பது துறைரீதியான விசாரணை என்ற பெயரில் குற்றவாளிகளைக் காப்பாற்றும் நிலைமை நீடிப்பதை கண்காணித்து அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதிய பாகுபாடு, தீண்டாமை, சாதிவிலக்கம், வன்முறை தொடர்ந்து நடக்கும் கல்வி நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 8. மாணவி வைஷ்ணவியின் பிரச்சினைக்குப் பின்தான், பெண்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் செல் அழகப்பா பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்தின் இதுபோன்ற நிர்வாகக் குறைகளைக் கண்டறிய அரசு அனைத்து கல்வி நிறுவனங்களிலும் கண்காணிப்புக்குழு ஒன்று அமைத்திட வேண்டும்.

**–அ.சிம்சன்**


# பாப்பாநாட்டில் பாலியல் வன்கொடுமைக்குள்ளான பெண்ணுக்கு நீதி வேண்டும்!

## தொடரும் பாலியல் வன்கொடுமைகளுக்கு தமிழ்நாடு அரசு முடிவு கட்ட வேண்டும்.

ஆகஸ்ட் 9, கொல்கத்தா பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நாடே போராட்டக் களமாகிக் கொண்டிருக்க, ஆகஸ்ட் 12 அன்று, தஞ்சாவூர் மாவட்டம், பாப்பாநாட்டில் இளம்பெண் ஒருவர் கொடூரமாக கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுள்ளார்.

வன்கொடுமைக்கு ஆளான பெண்ணின் புகாரை பதிவு செய்யாமலும் உடனடி நடவடிக்கை எடுக்காமலும் அலட்சியமாக நடந்துகொண்ட பாப்பாநாடு காவல்நிலையம், உதவி சார் ஆய்வாளர் சூர்யாவைக் கண்டித்து 19.08.2024 அன்று முழு கடையடைப்பு நடத்தப்பட்டது. காலை 9 முதல் பிற்பகல் 2 வரை, 200 பெண்கள் உட்பட 700 பேர் உண்ணாவிரதம் இருந்தனர். திமுக, அதிமுக, பாஜக தவிர்த்த அரசியல் கட்சியினர், பொதுமக்கள் நடத்திய அந்தப் போராட்டத்தில், சிபிஐஎம்எல் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநில அமைப்பாளர் ஆ. ரேவதி, நீதிக்கான மக்கள் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் அ.சிம்சன், முனைவர் அரச.முருகுபாண்டியன், பேராசிரியர் கோச்சடை மக்கள் சிவில் உரிமைக் கழகம், மனித உரிமை கூட்டமைப்பு தலைவர் சுகுமாறன், சிபிஐஎம்எல் தஞ்சை மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் தவச்செல்வம், செந்தில் உள்ளிட்ட ஆய்வுக்குழுவினர் நேரில் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். மக்கள் போராட்டத்தின் விளைவாக, பொறுப்பற்று நடந்து கொண்ட உதவி ஆய்வாளர் சூர்யா பணியிடை நீக்கம் செய்யப்பட்ட செய்தி பிற்பகல் 1 மணிக்கு வந்தது. ஆய்வுக்குழுவினர் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினரை, உறவினர்களை பக்கத்து வீட்டுக்காரர்களை, பொதுமக்களை சந்தித்து விவரங்கள் கேட்டறிந்தனர். அதனடிப்படையில் ஆய்வுக்குழு வெளியிட்ட அறிக்கை.

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு அருகேயுள்ள பாப்பாநாடு கிராமத்தில் கடந்த 12.08.2024 அன்று வங்கியிலிருந்து வீடு திரும்பிய 23 வயது இளம் பெண்ணை 6 பேர் கொண்ட கும்பல் வழிமறித்து, மக்கள் வசிக்கக் கூடிய குடியிருப்புப் பகுதி கொட்டகைக்குள் இழுத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளது. வன்கொடுமையை



எதிர்த்துப் போராடிய அப்பெண்ணை அடித்து உதைத்து, பீர் பாட்டிலால் தலை, கழுத்தில் தாக்கி, 4 பேர் அவரை வன்புணர்வு செய்துள்ளனர். அதற்கு 2 பேர் காவல் இருந்துள்ளனர்.

அன்று, மாலை 4.20 மணியளவில் பாதிக்கப்பட்ட பெண் அவரது தந்தை, உறவினர்களுடன் பாப்பாநாடு காவல்நிலையம் சென்று, பெண் காவல் உதவி ஆய்வாளர் சூர்யாவிடம் நடந்த கொடுமையைக் கூறி நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளனர். இது குறித்து உதவி ஆய்வாளர் சூர்யா விதிகளுக்குப் புறம்பாக, இரு ஆண் காவலர்கள் முன்னிலையிலேயே அப்பெண்ணிடம் விசாரித்துள்ளார். மேலும். வழக்குப் பதிவு செய்யாமல், ஒரத்தநாடு அனைத்து மகளிர் காவல்நிலையத்துக்குப் போகச் சொல்லியுள்ளார். பாதிக்கப்பட்ட பெண் தனக்கு உடல்நிலை சரியில்லை, புகார் எழுத முடியவில்லை என்று கூறிய பின்னரும் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யாமல் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார்.

பின்னர் பாதிப்புக்குள்ளான பெண், அவரது தந்தை உறவினர்களோடு பட்டுக்கோட்டை அரசு பொதுமருத்துவமனைக்குச் சென்று, மருத்துவர், செவிலியர்களிடம் சிகிச்சை அளிக்கும்படி கேட்டுள்ளார். உடனடியாக சிகிச்சை அளிக்க மறுத்த மருத்துவர், காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு வருமாறு திருப்பி அனுப்பியுள்ளனர். அதனால் இரவு 1 மணியளவில் ஒரத்தநாடு அனைத்து மகளிர் காவல்நிலையம் சென்று புகார் அளித்துள்ளார். அங்குப் பணியில் இருந்த பெண் காவல் அதிகாரி தஞ்சாவூர் இராஜா மிராசுதார் அரசு மகப்பேறு மருத்துவமனைக்குச் செல்லும்படி கூறியுள்ளார்.

பெரும் அலைக்கழிப்புக்கு ஆளாக்கப்பட்ட அப்பெண், அவரது தந்தை, உறவினர்களுடன் 13.08.2024 அதிகாலை 3 மணியளவில் தஞ்சாவூர் இராஜா மிராசுதார் அரசு மகப்பேறு

மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கிருந்த மருத்துவர்கள் உடனடியாக உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்துள்ளனர்.

இதற்குப்பிறகே, ஒரத்தநாடு அனைத்து மகளிர் காவல்நிலையம், இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலம் பெற்று, 13.08.2024 காலை 7 மணிக்கு முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்துள்ளனர். (Cr. No.13/2024 u/s 127(2), 118(1), 70(1), 351(3), 308(5), 61(2) Bharatiya Nyaya Sanhita (BNS), 2023). இதன்பின்னர், ஒரத்தநாடு நீதித்துறை நடுவர் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் நேரடியாக வாக்குமூலம் பெற்றுப் பதிவு செய்துள்ளார்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய 6 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யாமல் 1) கவி (எ) கவிதாசன், 2) திவாகர், 3) பிரவீன், 4) ஒரு சிறுவன் ஆகிய 4 பேர் மீது மட்டும் வழக்குப் பதிவு செய்து, சிறையில் அடைத்துள்ளனர். பாதிக்கப்பட்ட பெண் எழுத்துபூர்வமான புகாரிலும், ஒரத்தநாடு நீதித்துறை நடுவரிடமும் அளித்த வாக்குமூலத்திலும் கூறியுள்ள வேல்முருகன் மற்றும் மற்றொரு சிறுவன் மீது முதலில் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. போராட்டத்தின் காரணமாக, தப்பிக்க விடப்பட்ட வேல்முருகனும், மற்றொரு சிறுவனும் தற்போது சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் முதல்கட்ட சிகிச்சைக்குப் பின், பாதுகாப்பான வேறு இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார். குற்றவாளிகள் தாக்கியதால் தலை, முதுகுப் பகுதிகளில் ஏற்பட்ட காயங்களுக்கு உயர் சிகிச்சையும். உளவியல் ரீதியான சிகிச்சையும் அவருக்குத் தேவைப்படுகிறது.

குற்றவாளிகள், பாதிக்கப்பட்ட பெண்ணின் 1/2 பவுன் தோடு, 1 கிராம் பவுன் வளையம், செல்போன், ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பான் அட்டை ஆகியவற்றையும் பறித்துக் கொண்டனர். தங்கநகைகளை பட்டுக்கோட்டையில் விற்றுள்ளனர்.

பாப்பாநாடு காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் சூர்யா சட்டப்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் குற்றவாளிகளுக்கு ஆதரவாக அவர்களைச் சட்ட நடவடிக்கையில் இருந்து காப்பாற்றும் நோக்கத்திலும் செயல்பட்டுள்ளார். ஒரத்தநாடு காவல்நிலையத்தில் இருந்து ஆயுதப்படைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அவர், பொதுமக்கள் போராட்டத்தின் காரணமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். பட்டுக்கோட்டை அரசு பொது மருத்துவமனை நிர்வாகம் கடமையில் இருந்து தவறியதற்காக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது எனக்கேட்டு ஒரத்தநாடு நீதித்துறை நடுவர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

பாப்பாநாடு பகுதிகளில் காவல்துறை ஆதரவோடு கஞ்சா விற்பனை பல காலமாக நடந்து வருகிறது. பாலியல் வன்கொடுமை நடந்த கீற்றுக் கொட்டகை கஞ்சா விற்பனை செய்யும் இடமாக இருந்துள்ளது. பொதுமக்கள் இது குறித்து புகாரளித்துள்ளனர். காவல்துறை உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தக் குற்றத்தை தடுத்திருக்க முடியும்.

ஆய்வுக்குழு, தமிழக அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் வலியுறுத்தும் கோரிக்கைகள்:

***1) இளம் பெண் கூட்டுப் பாலியல் வன்புணர்வு வழக்கை உடனடியாக சிபிசிஐடி புலன்விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும்.***

***2) பாதிக்கப்பட்ட பெண்ணின் புகாரைப் பதிவு செய்து வழக்குப் பதிவு செய்யாததோடு; மருத்துவமனைக்கு அனுப்பி; மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் தரத் தவறிய பாப்பாநாடு காவல்நிலைய பெண் காவல் உதவி ஆய்வாளர் சூர்யா மீதும்; சிகிச்சை அளிக்க மறுத்ததோடு; மருத்துவப் பரிசோதனையை உரிய நேரத்தில் செய்யாமல் வழக்கின் முக்கிய ஆதாரங்கள் அழியக் காரணமான பட்டுக்கோட்டை அரசு பொது மருத்துவமனை மருத்துவர்; செவிலியர்கள் மீதும் குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.***

***3) பட்டுக்கோட்டை அரசு பொது மருத்துவமனை மருத்துவர்; செவிலியர்கள் மீது துறைரீதியான விசாரணை நடத்தி பணியிடை நீக்கம் செய்ய வேண்டும்.***

***4) பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு அரசு செலவில் உயர் மருத்துவ சிகிச்சையும்; உளவியல் சிகிச்சையும் உடனே அளிக்க வேண்டும். அவருக்கு இடைக்கால இழப்பீடாக 5 லட்சமும்; அவரது கல்வித் தகுதிக்கேற்ப அரசுப் பணியும் வழங்க வேண்டும்.***

***5) பாதிக்கப்பட்ட பெண்ணிற்கும்; அவரது குடும்பத்தினருக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும்.***

***6) பாப்பாநாடு பகுதிகளில் மட்டுமல்லாது தமிழகம் முழுவதும் கஞ்சா போன்ற போதைப் பொருள் புழக்கத்தைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.***

***7) கிருஷ்ணகிரி; பர்கூரில் போலி என்சிசி முகாமில் பல பெண் சிறார்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். தொடரும் இதுபோன்ற வன்கொடுமைகளுக்கு தமிழ்நாடு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பொள்ளாச்சி உள்ளிட்ட வன்கொடுமை நிகழ்வுகளில் ஈடுபட்ட குற்றவாளிகளை கடுமையாக தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.***

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்]

CPIML LIBERATION

மாநில அலுவலகம்: 3/254 பி. ஜீவா தெரு.
வண்டலூர். சென்னை - 600 048.

palaasai@gmail.com
Pazha Aasai thambi
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

Cell: 70945 51959
70945 51959
Asaithambi Palani
Off: 98403 40741

**பழ.ஆசைத்தம்பி**
மாநிலச்செயலாளர்


நாள்: 26.08.2024

பெறுநர்,

**தோழர் ரவிக்குமார் M.P அவர்கள்.**
மக்களவை உறுப்பினர், விழுப்புரம் தொகுதி

வணக்கம்.

முற்போக்கு ஆளுமைகள் கல்வியாளர்கள் களப்பணியாளர்கள் பங்குபெறும் மக்கள் கல்வி இயக்கம் மணற்கேணி ஆய்விதழ், நகரக் கல்வி மேம்பாட்டுக்குழு நடத்தும் கல்விக் கூடங்களில் சமத்துவம் பரப்புரை மாநாட்டிற்கு எமது கட்சி, இந்திய கமயூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) க்கு அழைப்பு விடுத்தமைக்கு மகிழ்ச்சி நன்றி!

தற்போதுள்ள நிலைமைகளில், கல்விக் கூடங்களில் சமத்துவம் பரப்புரை மாநாடு மிகவும் அவசியமான சமூக அரசியல் முன்னெடுப்பு. சமூக சமத்துவம் புழங்கும் வெளியாக இருக்க வேண்டிய பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், கெடுவாய்ப்பாக சாதி வேறுபாடுகள், தீண்டாமை வன்கொடுமை தாண்டவமாடும் கூடங்களாக இருப்பது கடும் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. நீண்ட நெடுங்காலமாக சாதி மறுப்பு, சாதி ஒழிப்பு கருத்துகள். இயக்கங்கள் செழித்த தமிழ்நாட்டில் இத்தகைய நிலைமை பெருகி வருவது ஆழ்ந்த கவலையளிப்பதாக உள்ளது. இங்கு பாஜக போன்ற சங்பரிவார் சக்திகள் இத்தகைய சூழலை பயன்படுத்திக் கொண்டு வளர முற்படுவது தற்செயலானதல்ல.

நாங்குநேரி வன்கொடுமை செயலை அடுத்து தமிழ்நாடு அரசு ஒருநபர் குழு ஒன்றை அமைத்து கல்விக்கூடங்களில் சாதி பாகுபாட்டை களைய தக்க பரிந்துரைகளை கேட்டிருந்தது. மேனாள் நீதிபதி சந்துரு அவர்களும் அரசுக்கு தனது விரிவான அறிக்கையை அளித்திருக்கிறார். ஆனாலும் கூட கல்விக் கூடங்களில் சாதி பாகுபாடு பின்பற்றப்பட்டு வருவது தொடர்கின்றன. அண்மையில், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில், மாணவி ஒருவர் இமானுவேல் சேகரன் குறித்த ஆய்வறிக்கை அளிக்கும் முயற்சியை தடுக்கும் விதமாக அந்த மாணவி மீது சமூக விலக்கமும் வன்முறையும் ஏவப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்களை உள்ளடக்கிய பொதுச் சமூகத்தை அரசியல், சமூக ரீதியாக அணிதிரட்டும் நோக்கில், 'கல்விக்கூடங்களில் சமத்துவம் எனும் பரப்புரை மாநாட்டை நடத்துவது மிகவும் அவசியமான சரியான முன்னெடுப்பாகும். தமிழ்நாடு அரசு, திரு சந்துரு அறிக்கையை சட்டப்பேரவையில் வைத்து அரசியல் கட்சிகளின் கருத்துகளை அறியும் நடவடிக்கையை இன்னும் மேற்கொள்ளவில்லை. அதற்குள்ளாகவே அறிக்கையை புறக்கணிக்குமாறு பாஜக உள்ளிட்ட பிற்போக்கு சக்திகள் குரலெழுப்பி வருகின்றன.

இந்த நிலையில் தமிழ்நாடு தழுவிய அளவில், மிகவும் அவசியமான கல்விக் கூடங்களில் சமத்துவம் முற்போக்கு, ஜனநாயக பரப்புரையை முன்னெடுக்கும் மாநாடு வெற்றி பெற இந்திய கமயூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் வாழ்த்துகிறது. அறிக்கையின் கருத்துகள், பரிந்துரைகளை ஆய்ந்து அவசியமானவற்றை செயல்படுத்த அரசை வலியுறுத்தும் விதமாக தொடங்கப்படும் இத்தகைய பரப்புரை தொடரப்பட வேண்டும். சாதிபாகுபாடுகள் ஏற்றத்தாழ்வுகளுடன் கல்விக் கூடங்களுக்கு வரும் மாணவர்கள் சமத்துவ உணர்வுடன் வீட்டுக்குத் திரும்புவது அவசியமானது. ஒட்டுமொத்த சமூகத்திலும் முற்போக்கான விளைவுகளை உருவாக்கும் ஆற்றல் கொண்டது. எனவே கல்விக் கூடங்களில் சமூக சமத்துவம் உறுதி செய்யப்பட மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எமது கட்சி, ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு தரும் எமது கட்சியும் இந்த முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடும் எனபதையும் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களன்புள்ள,

தோழர். பழ.ஆசைத்தம்பி,
மாநிலச் செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)
தமிழ்நாடு

உஆம் பக்கம் தொடர்ச்சி...

இருப்பினும் சாதிவாரி கணக்கெடுப்பு குறித்த கோரிக்கை ஆர்எஸ்எஸ்-ஐ திடுக்கிடச் செய்திருப்பது போல தெரிகிறது. சமூகத்தின் அனைத்து நிறுவனங்களிலும் தளங்களிலும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை ஒரு சாதிவாரி கணக்கெடுப்பு கட்டவிழ்த்துவிடும் என சங்கிப் படையணி அஞ்சுகிறது. எனவே சாதிவாரி கணக்கெடுப்பு என்ற கருத்தாக்கத்தையே களங்கப்படுத்த அது தீவிரமாக முயற்சிக்கிறது. சாதி என்பது இந்து மதம், சாதி என்பது இந்திய தேசம், சாதிகள் அனைத்தும் ஒத்திசைவான ஒழுங்குடன் ஒற்றுமையாக இருக்கின்றன என பஞ்சஜன்யா தலையங்கம் கூறுகிறது. ஆனால் சாதி மையமானது; சாதி எங்கும் நிறைந்திருப்பது எனில் நடப்பு நிலைமைகளுக்கேற்ப சாதிகள் பற்றிய புதுப்பிக்கப்பட்ட கணக்குக்கு ஆர்எஸ்எஸ் ஏன் அஞ்ச வேண்டும்? ஏனென்றால் இந்தியாவில் பாலினமும் சாதியும் சமூக சமத்துவமின்மையின், ஏற்றத்தாழ்வின் மிகப்பெரிய குறிப்பான்கள் ஆகும். இந்தியப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவினை சுட்டிக்காட்டி, இந்தியாவின் அசிங்கமான பொருளாதார சமத்துவமின்மையை மூடி மறைக்க விரும்புகிற சங்கிப் பரப்புரை போல, ஒத்திசைவான, ஒருங்கிணைந்த சமூக ஒழுங்கு முறையின், தேசிய நிறுவனத்தின் அடிக்கட்டுமானமாக சாதி விளங்குகிறது என்ற புனைவை விற்பதன் மூலம் சமூக பிரதிநிதித்துவத்தின் முற்றிலும் பாகுபாடான இயல்பை மூடி மறைக்க அது விரும்புகிறது.

சங்கி-பாஜக நிறுவனம் சாதியைக் கட்டிக்காப்பது போலவே இந்தியாவின் நட்புசார் முதலாளித்துவ ஒழுங்கமைப்பை கட்டிக்காப்பதையும் செய்கிறது. அதானியின் அதிவேக வளர்ச்சி, மாபெரும் கார்ப்பரேட் மோசடி குறித்தும், அதானி குழுமத்தின் கைகளில் செல்வத்தின், பொது சொத்துகளின் குறிப்பிடத்தக்க குவிமானத்துக்கு பின்னால் மோடி-அதானி பிணைப்பு ஆற்றிய மைய பாத்திரம் குறித்தும் எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்வியும் இந்தியாவுக்கு எதிரான சதிச் செயலாக முத்திரை குத்தப்பட்டு அதனை மௌனமாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதானி-அம்பானி குறித்த கதைகள் அடிப்படையில், அரசு ஆதரவில் செல்வம் அதிதீவிரமாக குவிதலும் ஆடம்பரத்தின் ஆபாசக் காட்சியுமாகும். இருப்பினும் சங்கி சொற்பொழிவுகள் அவற்றை சிறப்பான தேசிய சாதனைகள் எனக் கொண்டாடுகின்றன. மேலும் ஐந்து விழுக்காடு அதி பணக்காரர்களை நீக்கி விட்டால், இந்தியாவின் தனிநபர் வருமானம் உலகின் சில மிகவும் ஏழ்மையான நாடுகளுக்கு இணையாக வந்து விடும் எனக்கூறி உண்மையை மறைக்கிறார்கள். உண்மையில் சாதியும், நட்புசார் முதலாளித்துவமும் இந்தியாவின் தீவிர சமூக, பொருளாதார சமத்துவமின்மையின் மிகவும் குறிப்பிடத்தக்க சுற்றுப்பாதைகளை வரையறை செய்கின்றன. ஆனால் இந்தியா குறித்த சங்கிப் பார்வையில் இந்தியாவின் சமூக நிலைத்தன்மைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இவை இரண்டு தூண்களாக விளங்குகின்றன.

இந்தியாவின் வெற்றிக்கதையாக சமத்துவமின்மையைக் கொண்டாடுகிற சங்கிப் பார்வை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளின் அடிப்படையிலான, இந்த மூன்று அம்சங்களையும் ஒருங்கிணைந்த முழுமையாகக் கொண்டிருக்கிற ஜனநாயகக் குடியரசாக இந்தியாவைக் காணுகின்ற அம்பேத்கரின் சமத்துவ பார்வைக்கு முற்றிலும் எதிராக செல்கிறது. அம்பேத்கரை பொருத்தவரையில் ‘ஒரு வாக்கு ஒரு மதிப்பு’ என்ற அரசியல் சமத்துவத்திற்கான மிகப்பெரிய ஆபத்து, இந்தியாவில் ஆழமாக வேர்கொண்டுள்ள சமூக சமத்துவமின்மை, வளர்ந்து வரும் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகியவற்றில் குடிகொண்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த நவீன தேசமாக இந்தியா வளர்ச்சியடைவதற்கு சாதி மிகப்பெரிய முட்டுக்கட்டையாக விளங்குகிறது. ஆனால் ஆர்எஸ்எஸ் இந்தியாவின் நிலைத்தன்மைக்கும் வலிமைக்கும் அடிப்படை மூலாதாரமாக சாதியைக் கருதுகிறது.

அரசமைப்புச் சட்டத்திற்கு மோடி எவ்வளவுதான் அதிகமாக உதட்டளவு சேவை செய்தாலும், ஆர்எஸ்எஸ்-இன் உலகப்பார்வை நீதியின், சமத்துவத்தின் அடிப்படையிலான அரசமைப்புச் சட்ட பார்வைக்கு எதிரானதாகவே தொடர்ந்து இருக்கிறது. அந்த நீதியும் சமத்துவமும் இன்றி ஒரு ஒன்றுபட்ட நவீன இந்தியா இருக்க முடியாது. இளம் கொல்கத்தா மருத்துவரின் கொடூர வன்புணர்வு, கொலைக்கு எதிரான சீற்றம், மேற்கு வங்கத்தில், மாநிலம் தழுவிய போராட்டங்களையும், நாடு தழுவிய ஒருமைப்பாட்டுணர்வையும் தூண்டி விட்டதை காணும்போது உத்வேகம் கிடைக்கிறது. டஜன் கணக்கான “இரவினை மீட்டெடுப்போம்” போராட்டக் கூட்டங்கள், “எங்களுக்கு நீதி வேண்டும்” என்ற உரத்த முழக்கங்கள் மூலமாக, பெண்களின் சுதந்திரத்திற்கான முன்னெப்போதும் கண்டிராத கூட்டு அறுதியிடலாக சுதந்திர தினத்தின் அந்திவேளை அனுசரிக்கப்பட்டது. இன்றைக்கு சுதந்திரம் என்பது கடந்தகாலத்தை நினைவில் கொள்வது குறித்தல்ல. அது நம்முடைய அரசமைப்புச் சட்ட இலக்குகளையும் உரிமைகளையும் பெறுவதற்காக போராடுவது குறித்ததாகும். ஒரு ஜனநாயகக் குடியரசாக முன்னோக்கி அணிவகுத்து செல்வதற்கு ஆர்எஸ்எஸ்-இன் செயல்திட்டங்களை இந்தியா தீர்மானகரமாக தோற்கடித்தேயாக வேண்டும்.

**தமிழில்: செந்தில்**

## பாப்பநாடு பாலியல் வன்கொடுமைக்கு நீதிகேட்டு நடைபெற்ற உண்மையறியும் குழு விசாரணை மற்றும் ஆர்ப்பாட்டம்







## வண்டலூர் உயிரியல் பூங்கா இயக்குநருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை



## புதுச்சேரி ஆர்ப்பாட்டம்



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.09.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

ஏஐசிசிடியு தேசிய பொதுக் குழு; புனே








மக்கள் சந்திப்பு இயக்கம்





வண்டலூர் போராட்டம்

Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh